# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜூலை 2006 ஜீவியம் 12 மலர் 3

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| பூலோகச் சுவர்க்கம் | 3 |
| லைப் டிவைன் - கருத்து | 9 |
| எங்கள் குடும்பம் II | 11 |
| சாவித்ரி | 46 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 48 |
| அஜெண்டா | 54 |
| லைப் டிவைன் | 56 |
| அன்பர் கடிதம் | 62 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ புதிய, உயர்ந்த, உன்னத வாழ்வை மேற்கொள்ளும் உறுதி செல்வம்.

✡ நம்பிக்கையால் பணம் அபரிமிதமாகப் பெருகுவது உலக அனுபவம்.
நம்பிக்கையால் நம்பிக்கை அனந்தமாகப் பெருகுவது சத்தியமானாலும், பணத்தால் நம்பிக்கை அபரிமிதமாகப் பெருகுவது நடைமுறை.

✡ சொல்லால் எழும் பிரார்த்தனை சரணாகதிக்குத் தடை.

✡ பிரார்த்தனை பலிக்காத பொழுது பெருகும் நம்பிக்கை உயர்ந்த நம்பிக்கை.

## இம்மாதச் செய்தி

**எதற்கும் அசையாத மனிதன்**

**ஸ்ரீ அரவிந்தத்திற்கு அசைவான்.**





# பூலோகச் சுவர்க்கம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

முன்பு வந்தவரைப் போலவே வேறொருவர் வந்திருந்தார். கையில் அதே சீட்டு.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. சொர்க்கத்திலிருந்து எல்லோரும் பூலோகம் வரப் போகிறார்களோ? அங்கு ஏது பூகம்பமும், சுனாமியும்?

“இது அன்னையன்பர் வீடுதானே?” என்றார் வந்தவர்.

“ஆமாம். நீங்கள் யார்?” என்றேன்.

“நான் சொர்க்கத்திலிருந்து வருகிறேன்” என்றார்.

“சரிதான். பூலோகத்திலுள்ளவர்கள்தாம் சொர்க்கலோகம் போவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போதெல்லாம் சொர்க்கத்திலிருந்து பூலோகம் வருகிறார்களா?” என்றேன்.

“இப்போதெல்லாம் யாரும் சொர்க்கம்வரப் பிரியப்படுவதில்லையாம்” என்றார் அவர்.

“ஓ! அப்படியென்றால், நரகத்தில்தான் கூட்டம் அதிகமோ?” என்றேன்.

“அங்கேயும் இப்போது நெருக்கடியே இல்லை” என்றார்.

“சொர்க்கத்திற்கும், நரகத்திற்கும் போகாமல் பூவுலகவாசிகள் எங்குதான் போகிறார்கள்?” என்றேன் வேடிக்கையாக.

“அதனால்தான் நாங்கள் இங்குவரப் பிரியப்படுகிறோம்” என்றார்.

“ஒன்றும் புரியவில்லை எனக்கு” என்றேன்.

“உள்ளே அழைத்து, உட்காரவைத்துப் பேசமாட்டீர்களா?” என்றார்.

உட்குவிந்து, ‘அன்னையே! வந்திருப்பவர் யாரென அறியேன். என்ன செய்யட்டும்?’ என்றேன்.

‘உள்ளே அழைத்துப் பேசு’ என்று தெளிவாய் கட்டளை வந்தது.

மகிழ்ச்சியுடன், “உள்ளே வாருங்கள்” என்றேன்.

“யாருடைய உத்தரவிற்கோ காத்திருப்பதுபோல் தயங்கினீர்களே” என்றார்.

“ஆம், இந்த வீட்டுச் சொந்தக்காரரிடம் பேசினேன்” என்றேன்.

“வீட்டின் சொந்தக்காரர் எங்கேயிருக்கிறார்? நீங்கள் அவரோடு பேசியதே தெரியவில்லையே” என்றார்.

“அவர் எனக்குள்ளேயே இருக்கிறார். அதனால் உங்களுக்குத் தெரிய-வில்லை” என்றேன்.

“ஓ! பூவுலகம் இப்படியெல்லாம் வளர்கிறதா? அதனால்தான் அங்கே (சுவர்க்கத்தில்) வரவு குறைகிறது” என்றார்.

“சரி, நீங்கள் வந்த விஷயம் இன்னும் சொல்லவில்லையே” என்றேன்.

“சொர்க்கம், சொர்க்கம் என்று ஆசைப்பட்டு அங்கு போனதெல்லாம் உண்மைதான். ஆனால், அங்கு எனக்குப் பிடிப்பேயில்லாது போய்விட்டது. அதுவுமில்லாமல் பூவுலகின்மீது சொல்லமுடியாத ஒரு ஈர்ப்பு உண்டாகிறது. இங்கே ஏதோ மாற்றம் நிகழ்ந்துகொண்டிருப்பதாகச் செய்தியும் வந்தபடி இருக்கிறது. அதனால்தான் அதை அறிந்துபோக இங்கே வந்தேன்” என்றார்.

“நீங்கள் கூறுவது சரி என்றாலும், குறிப்பாக என்னைத் தேடி வந்து கேட்பது எனக்கு மிகவும் வியப்பாயிருக்கிறது. பெரிய மகான்களையோ, அறிவாளிகளையோ, விஞ்ஞானிகளையோ கேட்டிருந்தால் பொருத்தமாய் இருக்கும். நான் மிகவும் சாதாரணமானவள். எனக்கென்ன தெரியும்?” என்றேன்.

இப்பொழுது மகான்களையெல்லாம் யாரும் தேடிப் போவதில்லையாமே. அறிவாளிகள், விஞ்ஞானிகள் யாவரும் பின்னடையும்வண்ணம் சாமான்யர்களுக்குத்தான் மகிமை என்கிறார்களே” என்றார்.

“அப்படியா? எனக்கு அதைப்பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாது” என்றேன்.

“அதுதான் உங்கள் தகுதி” என்றார் மேலும்.

எனக்கு மிகவும் வெட்கமாயிற்று. ஒன்றும் தெரியாது என்பது ஒரு தகுதியா? இவர் ஏதோ என்னைக் கேலி செய்கிறார்போலும். பரவாயில்லை என்று சமாதானப்பட்டேன்.

“பூவுலகில் சலிப்பில்லை என்று எழுதியிருந்தீர்களே. அது எப்படி?”

“எதற்குச் சலிப்படையவேண்டும்? எனக்கு அமைதியும், ஆனந்தமும் தரும் சூழலில் இருக்கும்போது சலிப்புஏற்பட வாய்ப்பேது?”



“இங்கு எப்போதும் அமைதியில்லை, ஆனந்தமில்லை என்பதுதானே மனிதவியல்பு”.

“ஆம், சில காலம் முன்பு அப்படித்தானிருந்தது. ஆனால் தற்போதெல்-லாம் அப்படியில்லை”.

“உலகம் என்பதில் ஆன்மா பிறவி எடுத்து, உடலையும், உயிரையும் ஏற்று, பல ஆயிரம் முறைகள் பிறந்து, பிறவிச்சூழல் கனிந்து, கர்மம் கரைந்து, ஆன்மா விடுதலையடைகிறது. இந்தச் சுழற்சியில் அது களைத்து, சலித்து, ‘பிறவாமை வேண்டும்’ என்றல்லவோ பிரார்த்திக்கிறது. ஆன்மா விடுதலையடைந்து இறைவனை அடைவதையல்லவா விரும்புகிறது?”

“ஆம். இதுவரை அப்படித்தான் பேசப்பட்டது. ஆனால் தற்போது நிலைமை அடியோடு மாறிவிட்டது”.

“மாற்றியவர் யார்? ‘காயம் பொய், வாழ்க்கை பேய்’ என்று பேசிய பூவுலகப் பரம்பரையை மாற்றியவர் யார்?”

“எங்கள் பிரபு ஸ்ரீ அரவிந்தர் அவதரித்து சில உண்மைகளைக் கூறியுள்ளார்” என்றேன் நன்றியுணர்வுடன்.

“அப்படி என்ன உண்மையைக் கூறினார் அவர்?” இலேசாகச் சினம் தொனித்தது கேட்டவர் குரலில்.

“சொர்க்கம் பூவுலகிற்கு உரியது என்று கூறியுள்ளார். அது மேலுலக சொர்க்கத்தைவிட ஆனந்தமானது. அதை நாடியே இறைவன் உலகைப் படைத்தான். அவன் நாடிவரும் சொர்க்கம் பூமியில் இருக்கும்பொழுது நாம் அதைவிட்டு மேலுலகம் ஏன் போகவேண்டும்” என்கிறார்.

“என்ன சொல்கிறீர்கள்?”

“ஆம். இறைவன் ஆன்மாக்களைப் படைத்தது உலகில் அவை வாழ்விலும், ஜடத்திலும் இறைவனைக் கண்டு நிறைவு பெறுவதற்காகவே அன்றி, அவசரமாக மோட்சத்தை நாடி திரும்பி வருவதற்கில்லை என்கிறார். வாழ்வு விலக்கப்படவேண்டியதன்று. ஏற்று வாழ்ந்து, ஆன்மாவால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது என்ற புதிய தத்துவத்தை ஸ்ரீ அரவிந்தர் கூறியுள்ளார்”.

“இவையெல்லாம் தத்துவங்கள். ஆனால், கொலையும், கொள்ளையும் பெருகுவதாக வேறு ஒரு செய்தியுண்டு. அப்படியிருக்க எப்படி அமைதியும், ஆனந்தமும் கிடைக்கிறது என்கிறீர்கள்?”

“ஓ! அதுவா? இறைவன் தீமையைப் படைக்கவில்லை என்ற உண்மை தெரிந்துவிட்டதால்தான்”.

“என்ன சொல்கிறீர்கள்?” என்றார் அதிர்ச்சியாக.

"ஆம் ஐயா. சிருஷ்டியை லீலை என்று கூறியவர்கள், இதுவரை லீலைக்கு விளக்கமளிக்கவில்லை. அதை எங்கள் ஸ்ரீ அரவிந்தர் கூறிவிட்டார். அந்த இரகசியம் தெரிந்துவிட்டதால் தீமையும், தீமையால் வரும் துன்பமும் இல்லையென்றாகிவிட்டது".

"மேலும், மேலும் பெரிய விஷயங்கள் சொல்கிறீர்கள். லீலைக்கு என்ன விளக்கம் கூறியுள்ளார் என்பதைக் கூறமுடியுமா?" என்றார்.

"ஆனந்தமயமான பிரம்மம் தானே சிருஷ்டியாய் மாறியுள்ளது என்பதால் தீமையே இருக்க வாய்ப்பில்லையல்லவா?"

"ஏன் மாறியது? எப்படி மாறியது? என்றாலும் பதில் சொல்வீர்கள் போலிருக்கிறதே".

"நிச்சயம் சொல்வேன். அதைத்தான் ஸ்ரீ அரவிந்தர் விளக்கமாய்ச் சொல்லிவிட்டாரே. அதாவது ஓர் இன்பத்தை நாடி உலகை இறைவன் படைத்தான். இன்பம் என்பது பல வகைகளானது. அந்த இன்பங்களுள் அதிக இன்பம் தருவது மறைந்துள்ளதைத் தேடிக் கண்டுபிடிப்பதுதான். அதனால் இறைவன் தன் லீலைக்கு அதைத் தேர்வு செய்தான். அந்த இன்பத்தையும் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு போவதற்கு, நாம் பிறரையோ, பிற பொருள்களையோ தேடுவதற்குப்பதிலாக நம்மை நாமே தேடுவது பொருத்தமானது. தேடவேண்டுமானால் ஒளிந்துகொள்ள வேண்டும். அதாவது நாம் நம்மை நமக்கே தெரியாமல் மறைக்க வேண்டும். அப்படி மறைத்துவிட்டு சிரமப்பட்டுத் தேடிக் கண்டுபிடித்தால் அதிக இன்பம் அதிலுள்ளது என்று ஸ்ரீ அரவிந்தர் கூறியுள்ளார். எனவே, இறைவன் ஞானமான தன்னை மறந்து, அறியாமையாகி, தன்னை இழந்தான். இப்படித் தன்னை இழந்த இறைவன் வெளிவந்து ஞானமாகத் தன்னைக் காணவேண்டும். அதை மனிதன் வாயிலாகச் செய்வதால் மனிதனுக்கு மட்டுமே துன்பம். துன்பமே இன்பம் என்பது பரிணாம உண்மை என்பதால் இன்பம் ஒன்றே இருப்பதுஎனத் தெரிந்துவிட்டது. அதனால் அமைதி; ஆனந்தம்".

"அது சரி. பொழுது போகவில்லை என்றல்லவா பூலோகவாசிகள் கூறுவார்கள்? நீங்கள் பொழுது போதவில்லைஎன்று எழுதித் தந்தீர்களே, அது எப்படி?"

"ஆம். இறைவன் லீலையைப் பூர்த்தி செய்வதற்காக அவனை வாழ்வில் ஏற்று வாழும் வாழ்வில் ஓய்வேது? இது இறைவனாகும் யோகம். அதனால் பொழுது போகவில்லைஎன்பது தவறு. பொழுது போதவில்லைஎன்பதே சரி".

"அப்படியென்றால் என்னதான் செய்வீர்கள்?"



"முன்பெல்லாம் மனத்தை மட்டும் தூய்மை செய்து, அதன்மூலம் ஆன்ம விடுதலை பெற்றார்கள். ஆனால் இங்கு ஸ்ரீ அரவிந்தரின் பூரண யோகத்தில் உடல், உணர்வு, அறிவு, ஆன்மா என்ற எல்லாப் பகுதிகளும், அதாவது முழு ஜீவனும் தூய்மை செய்யப்பட வேண்டியுள்ளது. அவற்றை அவிப்பதோ, அழிப்பதோ கூடாது. அவற்றைத் திருவுருமாற்றம் செய்துவிட வேண்டும்".

"திருவுருமாற்றமா?"

"ஆம். திருவுருமாற்றம்தான். புலன்களைத் தூய்மைப்படுத்துவது. எல்லாக் குணங்களையும் அவற்றிற்கெதிரான நல்ல குணங்களாக மாற்றுவது. பூரணச் சுயநலம், அடிப்படை துரோகம், பொய் சொல்வது, சோம்பேறித்தனம் என்று எல்லாவற்றையும் அவற்றிற்கெதிரான நல்ல குணங்களாக மாற்றவேண்டும்".

"இது கடினமான வேலைதான் இதைச் செய்ய நேரம் போதாது என்பது சரியான பதில்தான். இவற்றையெல்லாம் செய்து, பிறகு சுலபமாகச் சுவர்க்கத்திற்கு வந்துவிடுவீர்களா?"

"இல்லையில்லை. எங்களுக்கு சுவர்க்கமோ, மோட்சமோ குறிக்கோள் இல்லை. குணங்களைத் தூய்மைப்படுத்தினால் குணங்களால் ஆன வாழ்வு தூய்மையாகிறது. தூய்மையான வாழ்வு அதன் ஆன்மாவிற்கு விடுதலை அளிக்கிறது. இந்த உயிரின் ஆன்மா வெளிவருவது வாழ்வில் என்பதால் அது மேலுலகம் போகாது. உயிர் வாழும் உலகத்திலேயே இருக்கும். ஆன்மா வாழ்வில் வெளிப்படுவதால் வாழ்வு சுவர்க்கமாகும்".

"ஓ! அதுதானா யாவரும் கூறும் பூலோகச் சுவர்க்கம்? இது இறைவனின் லீலையைப் பூர்த்தி செய்வது என்பது எப்படி?"

"அறியாமையுள் மூழ்கியுள்ள வாழ்வில் ஞானமான சைத்தியப்புருஷன் வெளிவருதலாகும். வாழ்வின் ஆன்மா வெளிவருதல் ஸ்ரீ அரவிந்தரின் கூற்றுப்படி லீலையை ஆண்டவன் நிறைவு செய்வதாகும். இறைவனின் அதிகபட்சக் குறிக்கோளை நிறைவேற்றும் முறை என்பதால் வாழ்வில் ஆன்மா வெளிவருதல் பூலோகத்தைச் சுவர்க்கமாக்குகிறது".

"ஏ அப்பா! இவ்வளவு பெரிய, பெரிய விஷயங்களையெல்லாம் தெரிந்து கொண்டு சாதாரணமானவர் என்று உங்களைப்பற்றிச் சொன்னீர்களே. அது பொய்யில்லையா?"

"இல்லை. அது பொய்யில்லை. இத்தனை விஷயங்களையும் நான் என் மெய்ஞ்ஞானத்தால் கூறவில்லை. ஸ்ரீ அரவிந்தரை தம் ஞானத்தால் உணர்ந்த ஒரு மெய்யன்பரின் எழுத்தில் படித்துச் சொல்கிறேன். என்னைப் பொருத்தவரை இவற்றையெல்லாம் படித்தறியவே நேரம் போதவில்லை.

புரிந்து செயல்பட மேலும் காலம் தேவைப்படுகிறது. இந்நிலையில் பொழுது போகவில்லை என்பது தவறல்லவா?"

"ஓ! மானுடர்கள் கவனம் இப்போது இதில் ஈடுபட்டதால்தான் நரகத்திலும், சுவர்க்கத்திலும் மானுடரின் வருகை நின்று போயிற்றா? நாங்கள் இறைவனைத் துதித்தபடி இருக்கிறோம். நீங்கள் இறைவனாகப் போவதாகக் கூறுகிறீர்கள். அப்படி நாங்கள் மாறமுடியுமா?" (என்று ஆர்வத்துடன் கேட்டார்).

"முடியாது" (என்று தயங்கியபடி கூறினேன்).

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"உங்களுக்கு எங்களைப்போன்ற உடம்பு இல்லையே (தேவர்களுக்கு ஒளியுடம்பு என்பது மரபு). இந்த யோகம் பூரணயோகம். இதைச் செய்ய உடல், உணர்வு, அறிவு, ஆன்மா என்ற நான்கும் கொண்ட முழுஜீவன் வேண்டும்".

"அப்படியானால் நாங்கள் இதைச் செய்யவே முடியாதா?" (என்றார் ஏமாற்றத்துடன்).

"ஏன் முடியாது? பூமியில் வந்து மானுடராய்ப் பிறந்துவிட்டால் முடியும்".

"தவம் செய்து மேலே போனோம். ஆனால் இங்கே நீங்கள் தவமேதும் செய்யாமலேயே இறைவனைச் சந்திக்கிறீர்கள். நானும் மனிதனாக ஆக ஆர்வப்படுகிறேன்".

"நீங்கள் சுவர்க்கம் போகத் தவம் செய்த காலம் வேறு. இப்போது இங்கு பூமியில் மானுடராகப் பிறக்கத்தான் நீங்கள் தவம் செய்ய வேண்டும் என்பதை மறவாதீர்".

"அது புரிகிறது. யாரை நோக்கித் தவம் செய்வது என்றுதான் தெரியவில்லை".

"அதுவும் சரிதான். நீங்கள் மேல்மனக் கடவுளர்களை நோக்கித் தவம் செய்து பயனில்லை. பராசக்தியாம் ஸ்ரீ அன்னையை நோக்கித் தவம் செய்தால் மட்டுமே அது சாத்தியம்" என்றேன்.

"நன்றியம்மா. நானும் இந்த யோகத்தைச் செய்ய தவம் செய்து, உடம்பு பெற்று, மானிடனாய் வருகிறேன்" என்றார்.

'உடம்பை, பொய்யென்றும், பேயென்றும் உதறித் தள்ளியது போக, உடம்புபெற தவம் செய்ய வேண்டிய நிலை உருவாகிவிட்டது. இந்த உடம்பிற்கு வந்த வாழ்வைப் பார்த்தாயா?' என்று வியந்தவண்ணம் சென்றார்.

*முற்றும்.*

❀❀❀



"Life Divine" – கருத்து

**மனம், வாழ்வு, ஜடத்தில் அவற்றின் ஆரம்பத்திலிருந்து அறியாமைக்குரிய காரணம் காணப்படவில்லை.**

- **"1862இல் அமெரிக்காவில் ஏழைகள் (slum dwellers) ஏழு வாரத்தில் வீடு, வாசல் பெற்று மத்தியதர மக்களானார்கள். கூலி 10 மடங்கு அதிகம். பயிரிட விரும்புகிறவர்க்கு 160 ஏக்கர் நிலம் இனாமாகத் தந்தனர். படகு வலித்தவன் 10 வருஷங்களில் ஆலை முதலாளியானான்" என்று வரலாற்று ஆசிரியர் Paul Johnson பால் ஜான்சன் எழுதுகிறார்,**

  "அன்று அமெரிக்காவில் வறுமையானவன் தன்னையே நொந்துகொள்ள வேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தில் பொருளீட்டாதவன் என்றும் சம்பாதிக்க மாட்டான்".

- **மனிதனுக்கு, கர்மம், வறுமை, நோயில்லை. அவனே அவற்றை நாடினால் அவனை ஆண்டவன் உள்பட எவரும் தடுக்க முடியாது என்பது நெடுநாட்களாக அறிஞர், உலகைப்பற்றிக் கூறுவது. அதன் அடிப்படை யோகத்தத்துவம் மேலே காணப்படும் கூற்று.**
  - **மனத்திலும், வாழ்விலும், ஜடத்திலும் அறியாமையில்லை எனில், அறியாமை மனிதன் விரும்பி நாடுவதாகும்.**
  - **Mind and Supermind என்ற அத்தியாயம் கீழ்க்கண்டவற்றைக் கூறுகிறது.**
    - **மனம் சத்தியஜீவியத்தின் உபகருவி.**
    - **இதனால் முழுமையைக் காண ஒரே பார்வையில் முடியாது. ஆனால் இரு பகுதிகளாகக் காண முடியும். மனத்தில் அறியாமையில்லை. மனம் ஒரு புறத்தைக் காண மறுத்தால் அறியாமை ஏற்படும்.**

☆ ஒரு புறத்தை மட்டும் காண முடிவு செய்யும் மனம் சத்திய ஜீவியத்துடனுள்ள தொடர்பை இழந்துவிடுகிறது. அது அறியாமையின் ஆரம்பம்.

☆ தீராத பிரச்சினையில்லை; தீர்க்காத பிரச்சினையுண்டு.

முடிவில்லாத சிக்கலை ஆராய்ந்தால் முடிவு தெரியும். "அதை நான் ஏற்க முடியாது" என்பார் பிரச்சினைக்குரியவர். தீர்வுண்டு. "என் இஷ்டப்படி தீர்வு வேண்டும்" என்று வற்புறுத்தினால் தீர்வில்லை என்பதே உண்மை.

☆ இக்கருத்து எந்த நாட்டிற்கும் பொருந்தும்.

உதாரணமாக, அணுகுண்டு ஒழிப்புத் திட்டம் 50 ஆண்டு-களாக முடிவு பெறாமலிருக்கிறது. ஏன்? முடியவில்லையா? என்ன தடை?

அணுகுண்டு வைத்துள்ள அரசுகள் அதை விட்டுக்கொடுக்க இசையவில்லை. இது ஒரு பிரச்சினையாகுமா?

தீர்க்க முடியாததே பிரச்சினை. தீர்க்க விரும்பாதது பிரச்சினை இல்லை. பிரச்சினை அறியாமையின் சின்னம். அறியாமை எங்குமில்லை. நாமே விரும்பித் தேடுவது

Taste of Ignorance.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

திரும்பத் திரும்ப வரும் செயல்கள் தங்கள் முத்திரைகளைத் தாங்கி வரும். அவற்றின் உருவங்களும் தெளிவாகத் தெரியும். அன்னையிடமும் திரும்பத் திரும்ப வரும். அதன் குணம் வேறு.

*திரும்ப வருவது திரிந்து வரும்.*



# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கோல்ட் மெடல்என நான் கூறியதை, சேர்மன் நம்பவில்லைபோலும். நான் மெடலைக் கொண்டுவந்து காண்பிக்கிறேன் என்றேன்:

✡ நம் திறமை மற்றவர்க்குத் தெரிந்தால்தான் நல்லது என்பது நமது அனுபவம். அது உண்மை. அதைக்கடந்த உண்மைகள் உண்டு.

❀ அது நாம் சொல்லாமல் பிறருக்குத் தெரிவது நல்லது.

❀ நம் திறமை எந்த வழியிலும் பிறருக்குத் தெரியாவிட்டால், சூட்சுமமாக அவர்கள் நமக்கு அதிக உதவி செய்வார்கள்.

✡ கணவர் இவ்வுண்மைகளை அறியாதவர். தாம் பெற்ற கோல்ட் மெடலைப் பற்றித் தாமே சொல்லிக்கொள்பவர். பண்போ, பக்குவமோ இல்லாதவர்.

✡ நாமே கோல்ட் மெடலைப் பற்றிப் பேசினால் சேர்மனுக்கு நம்பிக்கை இருக்காது. கணவரை, சேர்மன் நம்பவில்லைஎன, கணவர் புரிந்து கொண்டு, தாமே மெடலைக் கொண்டுவந்து காட்டுவதாகக் கூறினார். அப்படிக் காட்டுவது பலன் தாராது.

✡ *திறமை பலன் தருவது எப்பொழுது?*

❀ ஆன்மீகத்தில் மட்டுமன்று, வாழ்விலும் உலகம் தானே ஏற்காத திறமை பலன் தாராது.

❀ நாமே நம் திறமையை உலகுக்கு அறிவித்தால் உலகம் சந்தேகப்படும், மறுக்கும்.

❀ ஏற்றால், பலன் தர முன்வாராது.

❀ பலன் தந்தால் சிறிய பலனாக இருக்கும், அது நீடிக்காது.

- ❀ பெரும்பலன் தருவது, நீடிப்பது எவர் வாழ்விலும் தானே வந்த பலனாகும். நம் திறமையை உலகம் தானே ஏற்றுத் தருவது அது.
- ❀ கதையில் இக்குடும்பம் பெற்ற அனைத்தும் தானே வந்தவை.
  - ✰ கம்பனி வந்தது,
  - ✰ பவர்பிராஜெக்ட் வந்தது,
  - ✰ டெய்வான் பாங்க் அழைத்தது,
  - ✰ கணவரோ, தாயாரோ அறியாத வாய்ப்புகள்.
- ❀ மனம் அன்னையை நோக்கிப்போனால், அதிர்ஷ்டம் நம்மை நோக்கி வரும்.

  மனம் அன்னையை நோக்கிப்போகாவிட்டாலும், அதிர்ஷ்டம் வருமா, வாய்ப்பு வருமாஎன எதிர்பார்க்காத இடத்தில் வாய்ப்பு செயல்படும்.

  மனம் எதிர்பார்த்தால் செயல் தடைபடும்.
- ❀ இக்கதையில் வேலைக்காரனுக்குத் தோப்பு வந்தது; பெரியவனுக்கு வந்த ஆபத்து விலகியது; பெண்ணின் தோழியின் பிரச்சினை தீர்ந்தது ஆகியவை அத்தகையவை. அதற்கெதிரான சட்டமும் உண்மை. சிறியவன் இடைவிடாது பாட்மிண்டன் டீம் ஜெயிக்க செய்த பிரார்த்தனை பலித்தது எதிரான சட்டம். அதிலும் பைனல்ஸ் வரை வந்தது எதிர்பாராத நிகழ்ச்சி.

போனில் பார்ட்னருடன் பேசிவிட்டுத் திரும்பிய கணவர் முகம் மலர்ந்திருந்தது:

✡ *சமர்ப்பணம் செயல்படும் விதம்:*

- ❀ சமர்ப்பணம் அர்ப்பணத்தைவிட (Self-giving) பெரியது. சரணாகதி 9ஆம் கட்டமானால் அர்ப்பணம் 6ஆம் கட்டம். முயற்சியின்றி செய்வது சரணாகதி. முயன்று செய்வது தவம், பிரார்த்தனை. எளிமையாகச் செய்வது சமர்ப்பணம் (consecration). முயலவேண்டிய தேவையேயில்லாமல் ஜீவன் சத்புருஷனில் மலர்வது சரணாகதி.
- ❀ கணவர் மட்டமாகப் பழகினாலும், அவர் சமர்ப்பணச் சூழலில் இருப்பதால் அது சேர்மன் நல்ல குணத்தால் செயல்பட்டு, "அனுபவம் போதாது. அப்படிப்பட்டவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள்" என்று பேசுகிறார்.
- ❀ அன்னை கைவிடமாட்டார் என்பதை நாம், அன்னை இருக்கும் சந்தர்ப்பம்மூலம் செயல்படுவார்என அறியவேண்டும்.
- ❀ சேர்மன், 'தம் குறையைப் பாராட்டவில்லை, தம்மை நல்லவர்என்று நினைக்கிறார்' என்றவுடன் கணவர் இனியும் சமர்ப்பணம் செய்ய வேண்டுமாஎனக் கேட்கிறார். சேர்மன் தப்பபிப்பிராயம் கொள்ள-வில்லைஎன்பதால், நம் குறை அகன்றதாக அர்த்தமில்லை. நடந்தது என்னஎன்று அவர் அறியார்.
- ❀ பார்ட்னர் பக்குவமானவர். கணவர் மனம் புண்பட எதையும் சொல்லமாட்டார். மற்றவர்கள் பார்ட்னரிடத்திலிருந்தால், சேர்மன் கூறியதைப் பார்ட்னரிடம் கூறுவார்கள்என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. தாம் கோல்ட் மெடலைப் பற்றிப் பேசியது அசம்பாவிதம்எனக் கணவர் அறியவில்லை. பவர் பிராஜெக்ட் எங்கிருக்கிறது, பார்ட்னர் செய்தியைக் கேட்டு முகம் மலரும் கணவர் எங்கிருக்கிறார்?
- ❀ ஒரு நல்ல குடும்பத்தில் ஒரு சிறு செய்தியானாலும் அனைவரும் அறிவார்கள். இக்குடும்பம் அதுபோலில்லை. சிறு செய்திகளைப் பகிர்ந்துகொள்ளும்பொழுது நெருக்கம் எழும். நெருக்கம் நட்பாகி, உறவாகும். உறவு நல்லுறவானால் குடும்பம் பண்புடையதாகும்.
- ❀ தாம் தவறாகப் பேசியது தவறாகத் தெரியவில்லை. சேர்மன் நல்லபிப்பிராயம் மனத்தை மலரச்செய்கிறது. அப்படிப்பட்டவர் திருந்தமாட்டார். ''இப்படிப்பட்டவரிடம் நாம் அப்படிப் பேசி விட்டோமே'' என்ற வெட்கம் எழவில்லை. அருள் சூழலில்

கனத்திருக்காவிட்டால் இச்சொல் விஷயத்தைக் கெடுத்திருக்கும். பொதுவாகக் கணவர் வெட்கமில்லாதவர். தமக்கு வெட்கமில்லை எனவும் அறியாதவர்.

- கடவுள்கள் நம்மைக் கொடுமைப்படுத்தக்கூடியவர்கள். அவர்கள் பிரியப்பட்டால் எதுவும் செய்வார்கள் என்று அன்னை கூறுகிறார். அத்துடன் கடவுள்களை நாம் நம்புவதால்தான் அவர்கள் நம்மீது ஆதிக்கம் செலுத்த முடியும்என்றும் கூறுகிறார். அது கடவுள்களிடமே உண்மையானால், பவர் பிராஜெக்ட், பேங்க் சேர்மன் விஷயத்தில் அதிகமாக உண்மையாகும். நாம் எந்த அளவு சேர்மனை நம்புகிறோமோ - அவர் நம்பிக்கைக்குப்பாத்திரமாக நடந்து கொள்கிறோமோ - அந்த அளவு சேர்மன் நம் விஷயத்தில் செயல்படமுடியும். இதை நுணுக்கமாக அறிவது உதவும்.

மனைவி - Serious vs. silly; Truth vs. falsehood; Selfish vs. selflessness என்பதை நிதானம், பக்குவம், சில்லறை, சபலம், உண்மை, பரநலம் எனலாம். இம்மூன்றையும் முழுமையாகப் பின்பற்றினால் போதும்:

- ✡ தெய்வம் என்பது சத்தியம். வாழ்வு பொய்யும், மெய்யும் கலந்தது.
- ✡ நிதானம், பக்குவமாக இருக்க பொறுமை, திறமை, சக்தி தேவை. சக்தியற்றவரைத் தெம்பில்லாதவர் என்கிறோம். புன்சிரிப்பு அனைவரும் விரும்புவது. சிடுமூஞ்சியை எவரும் விரும்பமாட்டார். புன்சிரிப்பு எழ உள்ளே சக்தி பிறக்கவேண்டும். வேலை செய்யும்பொழுது பாட்டுப் பாடுகிறான்எனில் உள்ளே வேலை செய்வதற்குப் போதிய சக்தியும், பொங்கி வழியும் சக்தியுமிருப்பதாக அர்த்தம். சந்தோஷமில்லாமல் பாட்டு எழாது. தெம்பில்லாமல் சந்தோஷம் வாராது. நிதானமிருக்கத் தெம்பு அதிகமாக வேண்டும்.
  - நிதானமானவரை அனைவரும் பாராட்டலாம்.



- சிடுமூஞ்சியை எவரும் ஒதுக்குவர்.
- ஏன் சிடுமூஞ்சி, சிடுமூஞ்சியாக இருக்கிறான்என அறிய சாதாரண அறிவு போதாது. அவனோடு நாம் உணர்வால் ஐக்கியமானால், அவன் தன்னை உணர்வதுபோல் நாமும் உணர்ந்தால், ஏன் அவன் அப்படியிருக்கிறான்எனத் தெரியும். அதைப் பிறர் நோக்கம் என்கிறோம். அது ஆத்மஞானம்.

பிறர் கண்ணோட்டம் பிரம்மத்தின் கண்ணோட்டம்.

அவன் ஏன் சிடுமூஞ்சியாக இருக்கிறான் என்றறிந்தபின் நமக்கு அவன்மீது அனுதாபம் எழுகிறது. அது உணர்வில் அடுத்தவர் நோக்கம். அக்காரணம் தெரிந்தபின் அவன் அதிலிருந்து விடுதலை பெறும் திறனை அன்னை சக்தி நமக்களிக்கிறது. அதைச் செய்யும் அன்பர் அன்னையின் கருவியாகிறார்.

அன்னையின் கருவி அனந்தத்தின் கருவி

இதுபோல் உண்மை, பரநலத்தைப் பேணுபவர் உயர்ந்த அன்பர்.

- இக்குடும்பம் மேற்சொன்ன உயர்வுகட்கு விதிவிலக்கு.
- விதிவிலக்கான குடும்பத்திற்கு விலக்கிற்கு விலக்காகத் தாயார் அதிர்ஷ்டம் கொண்டுவந்துவிட்டார். திருடனுக்கு அரசப் பட்டம் கட்டியாகிவிட்டது. ராஜபார்வை வருமா?

திருடனுக்கு ராஜபார்வை வேண்டுமென்ற ஆர்வமிருந்தால், அது வரும்.

அது அன்னை சக்திக்குரிய சிறப்பு.

மிக ஏழையும் இன்று காரில் போகமுடிகிறது, TV பார்க்க முடிகிறது. அமெரிக்காவில் பெரிய பணக்காரன் நிரந்தரமாகப் பெறும் வசதிகளை மிக எளிய ஏழையும் கொஞ்சம் அனுபவித்துப் பார்க்கலாம் நம்மூரிலும். அந்த நிலை ஏற்பட்டுவிட்டது.

கம்பன் இராமாயணம் எழுதிய அற்புதத் தமிழை நாம் அன்றாட வாழ்வில் பேசப் பயன்படுத்துகிறோம்.

அன்னை திருடனுக்கும் ராஜபார்வை தருகிறார்.

யோகத்தை மேற்கொண்ட எவரும், எத்துறையிலும் செயல்பட விரும்பினால் செயல்படலாம்.

கணவர் - எப்படிப் பொய் சொல்லாமலிருப்பது?

✡ பொய் என்பது மனிதனுக்குரியது. அன்பனுக்குப் பொய் என்பது விலக்கு. அவதாரம் பொய்யைத் தேடிவருகிறது.

✡ மனம் பிளவுபட்டது என்பதால் பொய், மெய் என்ற இருஇடங்கள் உண்டு. வாழ்வு பொய்யும், மெய்யும் கலந்த அரங்கம். மனிதனுடைய வாழ்வு மெய், பொய் கலந்தது. அவன் பொய்யை விலக்கி, மெய்யை நாடினால், அன்னை அவனுக்குப் பொய் சொல்லும் சந்தர்ப்பம் தரமாட்டார். பெரியவன் பேசாததை வக்கீல் அடியாளிடம் சொன்னதால் வந்த பேராபத்து விலகியது அன்னை நம்மிடமிருந்து பொய்யை விலக்கும் வகை. அன்பன் பொய்யை நாடக்கூடாது. அவனே பொய்யை விலக்கவேண்டும். அன்பனே பொய்யை நாடினால் அதிக தண்டனை கிடைக்கும். முடிவில் அதுவும் சில சமயங்களில் அதிகப் பலன் தரும். பொய்யின் ஆழத்தில் மெய் இருப்பதால், அன்பன் மற்ற விஷயங்களில் மெய்யைப் பாராட்டியிருப்பதால் அது தரும் பலன் அது. அவதாரம் சத்திய லோகத்திலிருந்து பொய் லோகத்திற்கு வந்து, பொய்யிலிருந்து மீளும் மெய்க்குத் துணையாக நடக்கிறது. அவதாரம் பொய்யின் எதிராகப் போராடுவதின் விளைவு அது.

✡ பொய் சொல்லாமலிருக்கவேண்டும்என்பதும் மூச்சுவிடாமலிருக்க வேண்டும் என்பதும் ஒன்றுபோலத் தோன்றும். தெளிவாகச் சொன்னால் பொய் சொல்லாமலிருக்கவேண்டும்என்பது பேசாமலிருக்கவேண்டும் என்பதைப் போன்றது. மூச்சுவிடாமல் வாழமுடியாது. பேசாமல் வாழ முடியும். ஆனால் நாம் பேசாமலிருக்கப் பிரியப்படுவதில்லை.

✡ பொய் சொல்லாமல் வாழ்வது கடினம் என்றால் ஓரளவு மெய் சொல்லாமல் முழுப்பொய்யனும் வாழமுடியாது. முழுப்பொய்யன்



கூட்டாளியிடமாவது, மனைவியிடமாவது, மெய் சொல்லாமலிருக்க முடியாது. அதையும் கடந்து வந்தால் மனத்துடன் மெய் சொல்லியே தீரவேண்டும்.

✡ Verdict தீர்ப்பு என்றொரு படம். பிராங்க் என்ற வக்கீல் தம் பார்ட்னர்கள் ஊழல் செய்ததை எதிர்த்தார். ஊழல் செய்தவரே பிராங்க் என்று கூறி அவரைச் சிறைப்படுத்தினர். எதிர்ப்பை வாபஸ் செய்து விடுதலை பெற்றார். குடித்து வாழ்வை நாசமாக்கிக்கொண்டார். மனைவி அவரைவிட்டுப் போய்விட்டாள். மிக் என்ற நண்பர் பிராங்க் மீது பரிதாபப்பட்டு ஒரு நல்ல வழக்கு கொண்டு வந்தார். பெரிய டாக்டர்கள் அலட்சியமாக ஒரு பிரசவத்திற்கு வந்த பெண்ணை comaவில் இருக்கும் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டனர். அப்பெண் சார்பாக பிராங்க் கேஸ் நடத்தவேண்டும். ஆஸ்பத்திரி நிர்வாகம் கேஸ் எடுக்காமலிருக்க அப்பெண்ணிற்கு 1 கோடி ரூபாய் தர முன்வருகின்றனர். அப்பெண் சார்பாக பிராங்க் கேட்டது 3 கோடி ரூபாய். வக்கீல் அதைப் பெற மறுக்கிறார். வக்கீலுக்கு பீஸாக அதில் 1/3 பாகம் உண்டு. கேஸ் கோர்ட்டிற்குப் போகிறது. எதிரி வக்கீல் பிரபலமானவர். அவரிடம் 12 வக்கீல்கள் வேலை செய்கின்றனர். அவர்களுள் லாரா என்றொரு பெண் வக்கீலை வேவு பார்ப்பதற்காக பிராங்கிடம் அனுப்புகிறார்கள். பிராங்க் விவரம் தெரியாமல் அவள்மீது பிரியம்கொண்டு தம் வீட்டிற்கு அழைத்துப்போகிறார். லாராமூலம் எல்லாச் செய்திகளும் எதிரிக்குத் தெரிவதால் திறம்பட பிராங்க் செய்யும் ஏற்பாடுகள் முறியடிக்கப்-படுகின்றன. கோமாவில் உள்ள பெண்ணின் சகோதரியும், அவள் புருஷனும் வாதிகள். வாதி பிராங்க் 1 கோடியை மறுத்ததால் கோபம் கொண்டு அவரை அடித்துவிடுகிறான். பிராங்கிற்குப் பெரிய டாக்டர் சாட்சி சொல்ல முன்வருகிறார். எதிரி அவரைக் கலைத்துவிடுகிறான். மனம் ஒடிந்து பிராங்க் மீண்டும் எதிரியிடம் 1 கோடியைப் பெற முனைகிறார். அவர்கள் மறுத்துவிடுகின்றனர். ஆப்பரேஷன் சமயம் இருந்த நர்ஸ் தவிர அனைவரும் வாக்குமூலம் கொடுக்கிறார்கள். பிராங்க் விட்டுப்போன நர்ஸை சந்திக்க முயல்கிறார். அவள் நியூயார்க்

போய்விட்டாள். அவள் போன் நம்பர் கிடைக்க அவர் செய்த யுக்தி பலிக்கிறது*. அவளை கோர்ட்டிற்கு வரவழைக்கிறார்கள். கோமாவில் இருந்த பெண் ஆப்பரேஷனுக்குமுன் 1 மணிக்கு வயிறு நிரம்ப சாப்பிட்டதாக நர்ஸ் வாக்குமூலம் தருகிறாள். பைலில் 9 மணிமுன் சாப்பிட்டதாக எழுதியுள்ளது. டாக்டர் 1 மணி என்பதை 9 மணிஎனத் திருத்தியதாக நர்ஸ் வாக்குமூலம் தருகிறார். நர்ஸ் அந்த பைலுக்கு ஜெராக்ஸ்காப்பி வைத்திருக்கிறார். ஜட்ஜ், 'ஜெராக்ஸ் செல்லாது, அப்பெண் வாக்குமூலம் செல்லாது' என்கிறார். ஜுரி பிராங்க் பக்கம் தீர்ப்பளித்து 3 கோடியைவிட அதிகத்தொகை தர முன்வருகிறார்கள். லாரா, பிராங்க்கைச் சந்திக்க முயல்கிறாள். எதிர்க்கட்சி வக்கீல் லாராவுக்குப் பணம் எடுத்து, அவள் கவனமில்லாதபொழுது அவள் பையில் வைக்கிறார். லாரா மனம் மாறி இனி பிராங்க்கிற்கு உண்மை-யாக இருக்க விரும்புகிறாள். பிராங்க்கிற்கு அவள் மனம் மாறியது தெரியாது.

✡ உலகில் பொய்யின் பலமும், மெய்யின் பலஹீனமும் விளக்கும் கதையிது.

✡ மெய் தடுமாறுகிறது. விழுந்து எழுந்திருக்கிறது. முடிவில் சிரமப்பட்டு ஜெயிக்கிறது. நடுவில் மனம் உடைகிறது.

✡ மிக் கொண்டு வந்த உதவி மனித உதவி. அதுவே அன்னை உதவியாக இருந்தால் எப்படியிருக்கும்? அன்னை உதவியை பிராங்க் அதிகபட்சம் பெற்றிருந்தால் கோமாவில் இருந்த பெண் பிழைத்துக்கொண்டிருப்பாள். பிராங்க்கை முதலில் விலக்கிய வக்கீல் ஆபீஸ் விரும்பிச் சேர்த்துக் கொண்டிருக்கும்.

✡ அதிகபட்சமும், குறைந்தபட்சமுமில்லாமல், பொதுவாக பிராங்க் அன்னை உதவியைப் பெற்றிருந்தால் உதவி வருமுன் சில நாட்களுக்கு முன் பிராங்க் குடிப்பதை நிறுத்தியிருப்பார்.

---

* பிராங்க் நியூயார்க்கில் நர்ஸைப் பார்க்கப்போன சமயம் பிராங்க்கின் நண்பர் மிக், லாரா எதிர்கட்சி வக்கீலிடம் பணம்பெற்றதைக் கண்டுபிடித்து அவரும் நியூயார்க் போய் பிராங்க்கை எச்சரிக்கிறார். பிராங்க் லாராவை சந்தித்து கன்னத்தில் அறைகிறார்.



✡ தற்சமயம் ஊழலான ஜட்ஜ் இருக்கிறார். அன்னை உதவி வந்திருந்தால் உண்மையான ஜட்ஜ் ஒருவர் இருப்பார்.

✡ பெரிய டாக்டர் எதிரியிடம் பணம் பெற்று மறைந்துவிட்டார். அன்னை உதவி அதைத் தடுத்திருக்கும். அவரே மறைந்தாலும், அந்த இடத்திற்கு வரும் டாக்டர் உண்மையான திறமைசாலியாக இருப்பார்.

✡ வாதி பிராங்கை அடிக்க வந்தவர் லாராவை அடித்திருப்பான்.

✡ 1 என்பதை 9என திருத்தியது வேறு, வேறு இங்க்காக லென்ஸ்மூலம் தெரியும்.

✡ எதிரி வக்கீல் ஆபீஸில் உள்ள ஒரு வக்கீல் மோசடிப் பழக்கங்களை எதிர்த்திருப்பார்.

✡ இவையெல்லாம் நம் வாழ்வில் நடப்பதை நாம் அருளின் செயல்என அறியாமல் ஏதோ நடந்ததுஎனக்கொள்கிறோம்.

✡ கோமாலிருந்த பெண் பிழைத்துப் பெரும்பணம் பெற்றிருந்தால் அவள் வாழ்வே மாறியிருக்கும்.

✡ பிராங்க் தானே தெளிந்து தம் வீட்டைச் சுத்தம் செய்திருப்பார். செய்தவுடன் மிக் என்பவர் உதவியைக் கொண்டு வந்திருப்பார்.

✡ எதிரி வக்கீல் லாராவுக்குக் கொடுத்த செக், மிக் கண்ணில்பட்டது குட்டை உடைத்தது.

✡ அன்னை உதவியிருந்திருந்தால் லாரா வேவு பார்க்க வந்தவள், பிராங்க் மீது அனுதாபம்கொண்டு எதிரி செய்யும் அத்தனை மோசடிகளையும் பிராங்கிற்குச் சொல்லியிருப்பாள்.

✡ பிராங்கே அன்னை பக்தனாகியிருந்தால் பெரிய ஆபீசிலிருந்து வெளியேற்றப்பட்டவுடன் வேறு ஆபீஸ், அதைவிடப் பெரிய ஆபீஸ் அவரை ஏற்றிருக்கும்.

✡ அன்னை சக்தி யார்மூலம் வெளிப்படுகிறதோ, அதற்கேற்பச் செயல்-படும்.

✡ அன்னை சக்தி இக்கதையில் பிராங்க், மிக், லாரா, டாக்டர், ஆஸ்பத்திரி, கோமாவில் உள்ள பெண், அவள் சகோதரி, அவள்

கணவன், நர்ஸ்என வெவ்வேறு நபர்மூலம் வந்திருந்தால் எப்படி கதையின் போக்கு மாறியிருக்கும்எனக் கற்பனை செய்வது அன்னையை அறிய உதவும்.

கணவன் - தன்னம்பிக்கை போனால் எல்லாம் போய்விடும்;
மனைவி - சில்லறையை யாரும் விரும்பமாட்டார்கள்:

✡ அன்னை நம்பிக்கை நம்மை அருளுக்குப் பாத்திரமாக்குகிறது. அதேபோல் தன்னம்பிக்கை நம்மைச் சமூகத்தில் மரியாதையுடன் வாழ அனுமதிக்கிறது. தன்னம்பிக்கையில்லாதவர் பிறரை அண்டி வாழ வேண்டும். பிறரை நம்பி வாழ்ந்தால் பிறர் நம்மைப் போற்றமாட்டார்கள். நம்மைக் கேலிசெய்து அழிக்க 'பிறர்' என்ற சமூகம் முயலும்.

✡ கதையில் வயிற்றுவலியுள்ள குமாஸ்தாவைக் கணவர் போற்றிப் பாராட்டவில்லை. அவன் வலியால் வதைந்தான். சிறியவன், சின்ன பையன் என்பதால் வீடு அவனை ஆதரிக்கவில்லை. பெரியவன் கேலி செய்தபடியிருக்கிறான். தாயாருக்கு தன்னம்பிக்கையும், அன்னை நம்பிக்கையுமிருப்பதால், குடும்பமே அவரை நம்பி வாழ்கிறது.

- ❀ பார்ட்னருக்குப் பண்பும், நம்பிக்கையுமுண்டு.
- ❀ கணவருக்கோ, பெரியவனுக்கோ அது இல்லை.
- ❀ அவர்கள் தாயாரை நம்பவேண்டும்.
- ❀ அவர்கள் ஆதாயமுள்ள பார்ட்னரை நம்புகின்றனர்.
- ❀ அவரோ தாயாரை நம்புகிறார்.
- ❀ அன்னை நம்பிக்கையுள்ள தாயாரை பார்ட்னர் நம்புவதால், அவரைக் குடும்பம் நம்புவதால், தாயாருக்கு நிலையாகச் செயல்பட முடிகிறது. அன்னை செயல்படும் விதம் இது. குடும்பம் அன்னையை ஏற்கவேண்டும். அல்லது தாயாரை ஏற்கவேண்டும். அவர்கள் பார்ட்னர்மூலம் தாயாரை ஏற்கின்றனர். இது இரண்டாம்பட்சமான ஆதரவு.



✡ *சில்லறைஎன்றால் என்ன?*

❀ விஷயம், தோற்றம் என்பவை உண்டு.

தோற்றத்தைவிட விஷயம் முக்கியம்.

விஷயத்தை விட்டுத் தோற்றத்தைப் போற்றுவது சரியில்லை.

தோற்றத்தில் தம்மை இழப்பவர் சில்லறை.

கவர்னர் பார்ட்டிக்கு புது டிரஸ் அப்படிப்பட்டது.

❀ ஏன் மனிதன் சில்லறையாக இருக்கிறான்?

மனிதன் பிரம்மம்.

பிரம்மம் என்பது பரமாத்மாவும், பாதாளமும் இணைந்தது.

மனிதன் தன்னை பிரம்மமாக அறியவில்லை.

பரமாத்மாவாகவும் அறியவில்லை.

பாதாளத்திலுள்ள இருள் பிரபஞ்சம் முழுவதும் பரவி அடிமனமாக இருக்கிறது.

மனிதன் தன்னை அடிமனமாகவும் அறியவில்லை.

அடிமனம் தலைகீழே மாறி மேல்மனமாயிற்று.

மனிதன் தன்னை மேல்மனமாக அறிகிறான்.

அதனால் அவன் சில்லறையாகிறான்.

❀ சில்லறையான கணவர் நிதானமான பார்ட்னரைப் போற்றுகிறார். தாயார் பெண் என்பதாலும், தமக்கு மனைவி என்பதாலும் கணவரால் பார்ட்னரிடத்தில் தாயாரை வைக்கமுடியவில்லை. பார்ட்னர் தோற்றம், விஷயம் தாயாரிடமுள்ளது. விஷயத்தை விட்டு தோற்றத்தைப் பாராட்டும் குடும்பம் சில்லறை. சில்லறை சில்லறையை விரும்பாது. சில்லறை நிதானத்தைப் போற்றும். கணவர் பார்ட்னரைப் போற்றுகிறார்.

மனைவி - சுயநலமியே சுயநலத்தைப் பாராட்டமாட்டான்;
கணவன் - வாழ்வில் இம்மூன்றும் - நிதானம், மெய், பரநலம் - அருளுக்குரியவை:

- ✡ *வாழ்வு என்பதென்ன?*
- ✡ ஏன் மெய், நிதானம், பரநலம் அருளுக்குரியவை?
- ✡ மனம் அறிவு, உறுதிஎனப் பிரிக்க, அறிவு உறுதிமேல் செயல்பட்டுத் தன்னை இழந்து ஏற்படும் சக்தி வாழ்வு. வாழ்வை அறிவில்லாத ஆர்ப்பாட்டமான உறுதி எனலாம். அனைவருள்ளும் நாமுள்ளோம், நம்முள் அனைவரும் உள்ளனர் என்பது அறிவு. அதுவே பரநலம். 'என் வாயால் ரங்கன் மந்திரியாவான்எனக் கூறினால் அவன் மந்திரியாகி விடுவான் என்றால் அந்த பாவத்தை நான் செய்யமாட்டேன்' என்பது பெரியவனின் சுயநலம். தாயாரால் கம்பனி வந்தது எனில் தாயார் வணங்கும் அன்னையை தாமும் வணங்குவோம் என்று நினைக்காமல், 'எங்களுக்காகத் தாயாரே பிரார்த்தனை செய்யவேண்டும்' என்பது சுயநலம்.
- ✡ தொழிலாளர் தலைவன் நம் கம்பனியில் நுழைந்துவிட்டான் என்பதால் படபடத்தவர் கணவர். பார்ட்னர் நிதானமாக இருந்தார்.
  - ❀ நமக்குமேல் அன்னை இருக்கிறார் என்பது நிதானம்.
  - ❀ நாமே முடிவு, நம்மால் முடியாதுஎனக் கருதுவது படபடப்பு, சில்லறை.
  - ❀ நமக்கு மேலுள்ள அன்னையை மெய்எனக்கொள்ளாமல், நாமே மெய்எனக்கொள்வது பொய்.

    அன்னை மெய்.

    அன்னையை நம்புவது மெய்.

    நாம் என்பது அன்னையின் தோற்றம்.

    மெய்யான அன்னையை மறந்து பொய்யான தோற்றமான நம்மை நம்புவது சில்லறை.



அன்னை மெய்.

அன்னையை நம்பும் தாயார் மெய்.

தாயாரை நம்பும் பார்ட்னர் மெய்.

பார்ட்னர் அந்தஸ்து தோற்றம்.

பார்ட்னர்மூலம் வரும் கம்பனி மெய்யன்று. அவருக்குத் தாயார் மீதுள்ள நம்பிக்கை மெய்.

பவர் பிராஜெக்ட் மெய்யன்று; பார்ட்னர் நாணயம் மெய்.

பவர் பிராஜெக்ட் தரும் கமிஷன் 150 கோடி பணம். அது பொய்.

- ❀ குடும்பம் தலைகீழேயிருக்கிறது.

  நம்பவேண்டிய அன்னை, தாயார், பார்ட்னர், நாணயத்தை நம்பாமல், நம்பவேண்டாத பணம், பிராஜெக்ட், கம்பனியை நம்புகிறது.

  குடும்பம் சில்லறை, சுயநலம், மட்டம்.

  குடும்பம் திருவுருமாறவேண்டும்.

  மாறும் ஆர்வம் மெய்.

  அது இன்று குடும்பத்திற்கில்லை.

மனைவி - பொய் சொல்பவனும், பொய் சொல்பவனை நம்பமாட்டான். பொய் சொல்லாதவனை நம்புவான்:

- ✡ சுயநலமி சுயநலமியைப் பாராட்டமாட்டான்.

  பொய் சொல்பவன் பொய் சொல்பவனை நம்பமாட்டான்.

  திறமையற்றவன் காரியம் ஆகவேண்டுமானால் திறமையற்றவனை நாடமாட்டான்.

  அதனால்தான் எதிரானவை ஒன்றையொன்று நாடுகின்றன.

  அதுவே முரண்பாடு உடன்பாடாவதாகும்.

✡ மோசடி செய்பவன் வியாபாரம் ஆரம்பித்தால் உண்மையான சிப்பந்திகளைத் தேடுகிறான்.

தறுதலையான கணவன், பத்தினியான மனைவி வேண்டும்என நினைக்கிறான்.

ஏராளமான அதிகாரம் செய்யும் அதிகாரி, கீழ்ப்படியும் சிப்பந்திகளை நாடுகிறார்.

✡ ஆண்மகனுக்குக் கற்பில்லை; பெண்ணிற்குக் கற்புண்டு என்பது உலக நியாயம்.

அதிகாரத்தை ஏற்கவேண்டும் என்ற அநியாயம் ஊர் நியாயம், உலக நியாயம்.

அதிகாரத்தை ஏற்பது அநியாயமன்று, நியாயம் என்பது ஆண்டவன் வாதம்.

அதிகாரம் மாறி அன்பாகவேண்டும் என்பது பரிணாமத்தின் நியாயம்.

ஏழை திருடினால் தூக்குத்தண்டனை, பணக்காரன் திருடினால் தண்டனையில்லை என்பது அந்த நாள் சட்டம். இந்த உலகம் இந்த அளவு முன்னேறுவது அந்தச் சட்டத்தால்தான்.

✡ இந்த இரண்டு சட்டங்களும் சரி என்பதிலுள்ள தத்துவம் என்ன?

பிரம்மம் ஆதியில் எல்லா ஜீவராசிகளிலும் சமமாகப் பிறந்தது.

ரூபம், குணம் மாறி பலபொருட்கள் உற்பத்தியாயின.

பிரம்மத்தின் அநேக அம்சங்கள் அநேக ஜீவராசிகளாயின.

எல்லா ஜீவராசிகளும், எல்லா அனுபவங்களும் பெறுவது பிரம்மம் சிருஷ்டியில் முழுமை பெறுவதாகும்.

ஆயிரக்கணக்கான அனுபவங்களிருப்பதால், ஒவ்வொரு ஜீவனும் வெவ்வேறிடத்தில் ஆரம்பிக்கின்றன.

இரண்டு ஜீவன்கள் அன்பு, கோபம் என்பனவற்றை அனுபவிக்க வேண்டுமானால் ஒன்று அன்பிலும், அடுத்தது கோபத்திலும் ஆரம்பிக்கிறது.



ஒரு ஜீவன் அன்பைக் கொஞ்சமாக அனுபவித்து பல ஜன்மங்களில் அன்பைப் பூரணமாக அனுபவிக்கிறது.

அடுத்தது அதேபோல் கோபத்தை அனுபவிக்கிறது.

அன்பை அனுபவிக்கும் ஜீவன் கோபத்தில் சிறியது, அன்பில் பெரியது.

கோபத்தை அனுபவிக்கும் ஜீவன் கோபத்தில் பெரியது, அன்பில் சிறியது.

ஆரம்பத்திலும், முடிவிலும், அனைத்து ஜீவன்களும் சமம். இடையில் வேறுபட்டிருப்பது தோற்றம்.

அது சிருஷ்டிக்குரிய நிபந்தனை.

✡ அதனால் அவ்வுயர்ந்த ஆன்மீகச் சட்டப்படி பொய் தாழ்ந்ததில்லை, மெய் உயர்ந்ததில்லை.

இந்த ஞானம் பெற்ற ஜீவன் முடிவான அனுபவத்தை முதலிலேயே பெறும்.

அதுவே instantaneous miraculousness எனப்படும்.

புறவாழ்வில் அது வேறுபடும். அகவாழ்வுக்கு மாறினால் யுகம் க்ஷணம் ஆகும்.

✡ நாம் எங்கிருக்கவேண்டும் என்பது நம் இஷ்டம்.

கதையில் தாயார் அகத்திலும், குடும்பம் புறத்திலும் உள்ளனர்.

யோகத்தில் தாயார் புறத்திற்குரியவர்.

இயற்கை மெதுவாக, நிதானமாக தனக்குரிய அனந்தத்தை அனுபவிக்கிறது.

ஆன்மா அத்தனையையும் பார்த்துக்கொண்டிருக்கிறது.

வளரும் ஆன்மா அத்தனையிலும் ஆன்மீகச் சட்டப்படி பங்கு கொள்கிறது.

வளரும் ஆன்மா psychic being என்பது பூரணயோகத்திற்குரியது.

நாம் இயற்கையா, ஆன்மாவா, வளரும் ஆன்மாவா என்பதை நிர்ணயிப்பது நாமேயாகும்.

மனைவி - ..... அனைவரும் நம்பவேண்டுமானால், எந்தப் பொய்யும் சொல்லக்கூடாதல்லவா:

✡ திறமைக்கும், பண்பிற்கும் அடிப்படையான வித்தியாசம் உண்டு.

எந்த அளவு திறமையுண்டோ, அந்த அளவு பலன் உண்டு.

முழுமையில்லாத பண்புக்குப் பலனில்லை.

✡ பண்பு அனுபவத்தால் உற்பத்தியாகும், ஆத்மாவால் உற்பத்தியாகும்.

இயல்பாக மனிதன் சுயநலமாகச் செயல்படுகிறான்.

நடைமுறையில் மற்றவர்களுடன் பழகும்பொழுது சுயநலம் செல்லாது எனக் கண்டு, சுயநலத்தை விட ஆரம்பிப்பது பண்பு.

ஆத்மாவால் செயல்படும்பொழுது இயல்பாகச் சுயநலமின்றிச் செயல்-படுவதால் ஆரம்பத்திலேயே பண்புடன் நடக்கிறான்.

✡ இக்குடும்பத்தில் உயர்ந்தவர் தாயார்.

அவர் ஆத்மாவால் செயல்படவில்லை.

அவருக்கு அன்னைமீது பக்தி, நம்பிக்கையுண்டு.

குடும்பம் முன்னுக்கு வரவேண்டும்என்பது அவர் கருத்து.

குடும்பம் அன்னையால் அதிகமாக முன்னுக்கு வரும்எனக் கண்டார்.

பிறப்பிலேயே பண்பானவர் தாயார்.

அவர் பண்பு அவருடைய குடும்பத்தால் வந்தது.

தாயாரின்பண்பு ஆத்மாவால் வந்ததில்லை; அவர் பிறந்த குடும்பம் பெற்ற பண்பு.

அந்தப் பண்பிற்கு அளவுண்டு.

ஆத்மாவால் பிறந்த பண்பிற்கு அளவில்லை.

✡ பொய் சொல்லக்கூடாதுஎனப் பயில்பவன் பெரியவர்களிடம், நண்பர்-களிடம், குடும்பத்தில் பொய் சொல்வதில்லை.

பயிற்சியால் பொய் சொல்லாமலிருக்க முயற்சி வேண்டும்.



சம்பந்தமில்லாதவரிடம் பேசும்பொழுது முயற்சி எடுப்பதில்லை.

இயல்பாகப் பொய்சொல்லமுடியாதவன் எவரிடமும் பொய்சொல்ல மாட்டான்.

அவனை எவரும் நம்புவர்.

சில இடங்களில் பொய்சொல்பவனைக் கவனித்து உலகம் ஏற்கும்.

அனைவரும் நம்மை ஏற்கவேண்டுமானால், நாம் அனைவரிடமும் மெய் சொல்லவேண்டும்.

✡ கணவர் குடும்பத்தலைவர் என்பதால், அவரை எவரும் மறுத்துப் பேசுவதில்லை.

மறுத்துப் பேசாத இடத்தில் எதையும் சொல்லத் தோன்றும். மெய் மட்டும் சொல்லவேண்டிய அவசியமில்லை.

அப்படிப் பேசுவதால், அவருக்கு மெய்சொல்லவேண்டிய அவசியம் இல்லாமற் போய்விட்டது.

பெரியவன் ஒரு படி அதிகமாகச் செல்பவன்.

அது அவனிடம் கேலியாகிவிட்டது.

சின்னவனைக் கேலி செய்வான்.

வேறு எங்கும் கேலி செய்யமுடியாது.

கேலி என்பது பொய்யின் கடுமையான, கொடூரமான உருவம் என்பதை ஓரளவு ஏற்கனவே எழுதியுள்ளேன். என்றாலும் கேலி என்பது சமுத்திரம்.

கேலி என்பதில் சுபாவம், சமூகம், சுறுசுறுப்பு, நடைமுறை, occupation, பொழுதுபோக்குஎன பல விஷயங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

❀ எந்த விஷயத்திலும், எல்லாவிஷயங்களும் சம்பந்தபட்டிருக்கும் என்பது சட்டம்.

❀ அதனால் கேலி சம்பந்தப்படாத விஷயமேயிருக்காது.

❀ கேலியை ஆராய்ச்சி செய்தால், ஆராய்ச்சியை, கோடிவரை கொண்டு போனதாக அர்த்தம்.

மனைவி - .... பொய் சொன்னால் தன்னம்பிக்கை போய்விடும்:

✡ மெய்என்பது உள்ளது. நாம் செய்தது. நாம் நல்லதுஎன நம்பிச் செய்தது.

✡ ஏன் பொய் சொல்கிறோம்? நாம் செய்தது சரியில்லைஎன இல்லாததைச் சொல்கிறோம்.

✡ செய்தது சரியில்லைஎனில், நாம் சரியில்லைஎனப் பொருள். நாம் சரியில்லைஎனில் நமக்கு நம்மீது நம்பிக்கையில்லைஎனப் பொருள். அது தன்னம்பிக்கையை இழப்பதாகும்.

✡ கம்பனியில் யூனியன் தலைவரை வைத்தது சரியில்லை என்றவுடன் கணவருக்குப் பயம் வந்துவிட்டது. எல்லாம் போய்விட்டது போலாகிவிட்டது. பார்ட்னருக்கு அப்பயம் வரவில்லை. பெரிய கம்பனி அவனை விரும்பி அழைக்கிறது. ஏன்? அவர்களுக்குத் தன்னம்பிக்கை இருக்கிறது. அவன் கெட்டிக்காரத் தொழிலாளி. அக்கம்பனியில் தொழிலாளர்கள் திறமைமிக்கவர்கள். திறமையுள்ள தொழிலாளி அதிகம் சம்பாதிப்பான். அவனுக்கு யூனியன் தேவைப்படாது.

திறமையுள்ள இடத்தில் தில்லுமுல்லு செல்லாது.

தில்லுமுல்லு இல்லையெனில் யூனியன் நிர்வாகத்திற்கு ஆதரவு.

✡ தன்னம்பிக்கை self-confidence. அதுவே Self-confidence ஆவது ஆத்மா விழிப்பதாகும். Selfக்குப் பொய் உதவாது; self பொய்யில் வாழ்வது; self பொய்யில் வாழ்ந்தாலும் அதன் வித்து மெய். எல்லாப் பொய்யும் மெய்யால் உயிர் வாழ்கின்றன. பொய்சொன்னால் வளர்வது அகந்தை. மெய்சொன்னால் வளர்வது ஆத்மா.

ஆத்மாவின் ஆதரவின்றி தன்னம்பிக்கை எழாது.

✡ Verdict என்ற கதையில் பிராங்க் மெய்சொன்னதால் அவர் வேலை செய்த வக்கீல்ஆபீஸ் அவரைச் சிறையிலடைத்தது. பொய்யை ஆதாரமாகவுள்ள சமூகத்தில் மெய்க்கு ஆதரவில்லை, எதிர்ப்புண்டு. கதையின் போக்கு பிராங்கிற்கு ஆதரவாக மாறியபின் பிராங்க் பல சிறிய பொய்களைச் சொல்கிறார்.



1) தம் ரூம் குப்பையாக இருப்பதை மறைக்க கிளார்க் வெளியில் போயிருப்பதாக வாதிகளிடம் கூறுகிறார்.
2) நர்ஸுடைய மெயில் பாக்ஸை உடைத்துத் திறந்து டெலிபோன் நம்பரை எடுத்துக்கொள்கிறார்.
3) பிராங்க் இருக்கும்பொழுதே மிக் அங்கு பிராங்க் இல்லை என்கிறார்.
4) நியூயார்க் நர்ஸிடம் தாம் ஒரு பத்திரிகை ஆபீஸில் வேலை செய்வதாகக் கூறுகிறார்.
5) ஆஸ்பத்திரி நர்ஸிடம் தாம் நியூயார்க் நர்ஸோடு பேசியதாகக் கூறுகிறார்.

✡ இத்தனைப் பொய்களையும் மீறி அவர் கேஸ் ஜெயிக்கிறது.

✡ பொய்சொன்னாலும் ஜெயிக்கும் என்று பொருளா, பொய்சொன்னதால் ஜெயித்தது என்று அர்த்தமா, பொய்சொல்வதற்கும், ஜெயிப்பதற்கும் தொடர்பு இல்லைஎனப் பொருளா?

✡ பொய்சொல்வதை எப்பொழுதும் ஏற்கமுடியாது.

✡ அவருடைய கேஸின் மெய்க்குட்பட்ட பொய் அவரை அப்பொழுது பாதிக்காது. ஆனால், நிச்சயமாகப் பிறகு பாதிக்கும்.

✡ பொய்யானாலும், வலுவான மெய்க்குட்பட்டதானால் மெய்யை அழிக்க முடியாது.

கணவர் - விரயத்தைப் பெருமையாக நினைப்பவர், பெரிய இடத்தில் பழகினால் விரயம் தவறுஎன அறிவார்:

✡ பணம் அதிகமாக உள்ள இடத்தில் பலபொருள்கள் ஏராளமாக விரயமாவதை அங்குப் பழகுபவர்கள் கண்டு, விரயம் செல்வத்திற்கு அடையாளம்எனப் புரிந்துகொள்கின்றனர். அது உண்மையன்று.

✡ அதே சமயத்தில் பெரிய இடங்களில் விரயம் ஏராளமானஇடங்களில் முயன்று தவிர்ப்பதை அவர்கள் காண்பதில்லை.

✡ விரயத்தின் வகைகள் பல:

1) நிர்வாகம் குறைவாக இருப்பதால் ஏற்படும் விரயம்.
2) தொழில் நிர்ப்பந்தத்தால் ஏற்படும் தவிர்க்கமுடியாத விரயம்.
3) கவனக்குறைவு, அலட்சியத்தால் ஏற்படும் விரயம்.
4) பெருமைக்காகச் செய்யும் விரயம்.

- ✰ நான்காம் வகை விரயம் வேகமாக ஸ்தாபனத்தை அழிக்கும்.
- ✰ மூன்றாம் வகை விரயம் ஸ்தாபனத்தை நிதானமாக அழிக்கும், வளர்வதைத் தடுக்கும்.
- ✰ இரண்டாம் வகை விரயம் ஸ்தாபனத்தை அழிக்காது. வளரவும் உதவும்.
- ✰ முதல் வகை விரயம் இலாபத்தை அழிக்கும். எந்தநேரமும் அதை மீண்டும்பெறலாம்.
- ✰ பொதுவாக விரயம் என்பதில் இந்த 4 அம்சங்களும் கலந்து இருக்கும்.
- ✰ புரிந்துகொள்பவர் பாகுபாடற்றவரானால், ஒன்றை மற்றதாகப் புரிந்துகொண்டு அதை இலட்சியமாக்கிப் 'பலனை'ப் பெறுவர். அது அறிவுக்குப் பொருந்தாது.

✡ சுயநலத்திற்கும், விரயத்திற்கும் தொடர்புண்டு.

- ❀ சுயநலமி விரயத்தை அனுமதித்தாலும், பிறருக்கு அது பயன்படக் கூடாதுஎன நினைப்பான்.
- ❀ அவனுக்கு அதிகப்பணம் சேரும். அப்பணம் அவன் சுயநலத்தை வளர்க்கும்.
- ❀ ஸ்தாபனத்தில் தவிர்க்கமுடியாத விரயத்தைக் காண்பவர், 'இப்படியெல்லாம் வீணாகிறது. நம்மை அனுபவிக்க விடமாட்டார்-கள்' எனப் பொருமுவார்கள்.
  - ✰ தவிர்க்கமுடியாத விரயமும் பலவகைகளாக இருக்கும்.



- ✰ ஸ்தாபனத்திற்குத் தவிர்க்கமுடியாதது, காண்பவருக்கு விரயமாகத் தெரியுமேதவிர, தவிர்க்கமுடியாத விரயமாகப் புரியாது.
- ✰ ஸ்தாபனத்தின் நோக்கில் காணாமல் தங்கள் சுயநலப் பார்வைக்கு அப்படித் தெரியும்.
- ✰ சுயநலமான முதலாளியை சுயநலமான பிறர் அறியும் பாணியிது.

**அன்னைக்குப் பிரார்த்தனை செய்தால் தண்ணீர்ப்பஞ்சம் போகுமே:**

✡ ஒரு பக்கம் விரயம் செய்துகொண்டு அடுத்தப் பக்கம் பிரார்த்தனை செய்தால் பலிக்குமா? அப்படிப் பிரார்த்தனை செய்யவே முடியாது.

✡ பொதுவாக நாம் பிரார்த்தனைஎன்றால், எந்தப் பிரார்த்தனையும் பலிக்க வேண்டும்என எதிர்பார்க்கிறோம்.

✡ பிரார்த்தனைக்குரிய முறைஎன்று ஒன்றில்லையா?

✡ ஏதாவது ஒருபொருளை விரயம் செய்தாலும், அடுத்த பொருளுக்காக செய்யும் பிரார்த்தனை பலிக்காது. ஏனெனில் விரயமும், பிரார்த்தனையும் எதிரிகள். தண்ணீரையே விரயம் செய்தால், எப்படிப் பிரார்த்தனை பலிக்கும்?

✡ கணவர் மேற்சொன்னதுபோல் பேசுவது, எதுவும் புரியாதவர் பேச்சாகும்.

✡ இது வாழ்க்கைக்குரிய சட்டமாயிற்றே. வாழ்க்கையில் பிரச்சினை இல்லாத சௌகரியம் என்றுண்டா? பெய்யும் மழை இரவில் பெய்யக்கூடாதா என்பவருண்டு. நான் வெளியில் போகும்பொழுது மழை பெய்யக்கூடாது என்பவரும் உண்டு. மழை நம் சௌகரியத்திற்குப் பெய்யவேண்டும்என நினைப்பது பொருந்துமா?

✡ வலிக்காமல் பிரசவமாகவேண்டும்என எதிர்பார்க்க முடியுமா?

✡ போர்க்களத்தில் உயிர்ச்சேதம் கூடாதுஎன நினைப்பது பொருந்துமா?

✡ குழந்தை அழாமல் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுமா?

✡ அறிவுக்குப் பொருந்தாததைக் கேட்கக்கூடாது.

✡ இப்படிப் பிரார்த்திப்பவர் பிரார்த்தனைஎன்றால் என்னஎன்று அன்னை எழுதியவற்றைப் படிக்கவேண்டும்.

✡ நினைவு - அன்னை நினைவு - வருவதில்லை.

✡ நினைவு வந்தால் இதுபோன்ற பிரார்த்தனை தோன்றாது.

✡ நினைவு என்றால் என்ன?

✡ நினைவு என்பது அன்னை நினைவாகும்.

✡ நாம் நம்மையே நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

✡ அன்னை நினைவு நிலைத்ததும், நம் நினைவு விலகும்.

✡ அன்னை நினைவுக்கு மழை தானேபெய்யும்.

✡ பெய்யும் மழையை வரவேற்கும்மனம் வேண்டும்.

✡ நினைவுள்ள மனத்திற்கு வரவேற்பு முடியும்.

✡ வரவேற்கும்பொழுது குறை தெரியாது.

✡ கூட்டத்திற்குத் தலைவர் இரவு 10 மணிக்கு வருவது தாமதமாகத் தெரியாது. தலைவர் வந்துவிட்டதுதான் தெரியும்.

✡ குறை காணமுடியாத மனம் நிறைவுக்குரியது.

✡ காரியம் முடியவேண்டும்என்ற இடத்தில் குறை நமக்குத் தெரிவது இல்லை.

✡ குறை தெரியுமிடத்தில் காரியம் முடியாது.

✡ மழை பெய்யும்பொழுது குடைபிடிப்பதே அருளுக்குத் தடை என்கிறார் அன்னை.

✡ அருளை அன்னை அழைக்கப் பெரும்பாடுபடுவதாகக் கூறுகிறார்.

✡ நாம் மழைக்கு நிபந்தனை விதிக்கமுடியுமா?

மனைவி - நமக்கு நம்பிக்கைவேண்டும். உள்ள நம்பிக்கை வளர வேண்டும் என்பது நல்ல பிரார்த்தனை:



✡ நம்பிக்கை மலை போன்றது. மலையை நகர்த்தகூடியது.

✡ நமக்கு அது போன்ற நம்பிக்கை இல்லை. நமக்கு நம்பிக்கை மனிதர்கள் மேலுண்டு, பணத்தின்மீதுண்டு. ஹாலந்திலிருந்து மாஸ்கோவிற்குப் போனவர் கோர்பஷாவைப் பார்க்கப் போகவேண்டிய நேரம், தாயார் தத்துக்குத்தலாக இருப்பதாக வந்த தகவலை தட்டுத்தடுமாறி நண்பர்கள் கூறியதை அன்பர் புரிந்துகொண்டு, அடுத்த விமானத்தில் புறப்பட்டு வந்தார். இடையில் கோர்பஷாவை சந்தித்தார். மனம் ஒரு நிலையிலில்லை. அதற்குள் தாயாரை ஆஸ்பத்திரியில் சேர்த்து ஆக்ஸிஜன் தருகிறார்கள். இனி பிழைக்காது என்பதால் டாக்டர்கள் வர மறுத்தனர். 5 நாட்களாயிற்று. கோமாவிலிருந்த தாயாருடன் மானஸீகமாகப் பேசினார். பிழைத்து எழுந்து ஓராண்டு உயிரோடு இருந்தார். அது நம்பிக்கை.

  ❀ அந்த நம்பிக்கை ஆழத்தில் நம்முள் இருப்பதால், நாம் உயிர் வாழ்கிறோம்.

  ❀ அது மேலெழுந்த நிலையில் வந்து செயல்படுதல் அரிது.

  ❀ ஆபத்தான நேரத்தில் சிலருக்கு வரும். அந்த நேரமும் அனைவருக்-கும் வாராது.

  ❀ அந்நம்பிக்கை மேலேவர ஆபத்து வருவதாகத் தத்துவம்.

✡ ஆபத்தில் எழும் நம்பிக்கை அனுதினமும் எழுவது சாதனை, யோகம்.

✡ எவ்வளவு சிறு விஷயத்தில் நம்பிக்கை எழுகிறதோ, அவ்வளவு நம்பிக்கை உயர்ந்தது.

✡ ஆபத்து வந்து நம்பிக்கை எழுவதற்குப் பதிலாக, பிரார்த்தனையால் நம்பிக்கை உயர்வது பக்தி.

✡ நம்மால் முடியாத நேரம் நம்பிக்கை, முடிந்த நேரம் அன்னை நினைவு வாராது. நம்பிக்கை எழுந்து செயல்படாது.

✡ இளவயதில் உடல் துள்ளும். வயதானால் எடுத்த அடியை மீண்டும் தரையில் வைக்கமுடியுமாஎன ஐயம் எழும். இளவயதில் எழாத ஐயம்

அது. ஐயம் எழாததுடன் காடு, மேடு, முள்ளனப் பாராமல் ஓடும்வயது இளமை. அப்படி ஓடினாலும், எந்தமுள்ளும் அவன் காலில் குத்துவது இல்லை. நமக்கில்லாத நம்பிக்கை நம்உடலுக்கிருப்பதால் எந்த முள்ளும் குத்துவதில்லை.

- ❀ இது unconscious faith, கண்மூடியான மூடநம்பிக்கை.
- ❀ இது விலங்குகட்குண்டு. விலங்கிற்கு காலில் காட்டிலுள்ள முள் குத்துவதில்லை.
- ❀ பிரார்த்தனையால் வரும் நம்பிக்கை conscious faith, அறிவோடு உள்ள நம்பிக்கை.
- ❀ கண்மூடியான நம்பிக்கை நம்மை விலங்காக்கும்.
- ❀ அறிவுள்ள நம்பிக்கை நம்மை தெய்வமாக்கும்.

✡ நம்பிக்கை வளரப் பிரார்த்தனையைப் பயன்படுத்துவது பிரார்த்தனையை நல்ல முறையில் பயன்படுத்துவதாகும்.

கல் சுவரெழுப்பி - மண்சுவரை இடித்துவிட்டு - கூரை போட்டு 'கல்வீடு' கட்ட கனவு கண்டவர் கனவு கனவாக இருந்தபொழுது, அன்னை வந்ததால் மச்சுவீடு கட்டினார். மனம் 'கல்வீட்டை' விட்டு மச்சு வீட்டிற்கு மாறுவது மேற்சொன்னதைப்போன்ற உயர்ந்தபிரார்த்தனை. கனவு காண முடியாத மச்சுவீட்டை நனவில் நடத்திக்கொடுக்கும் தெய்வம் வீட்டில் பலஆண்டுகளிருந்தபொழுதும், அதைத் திரும்பிப் பார்க்கமுடியாத மனம் உயர்ந்து, அதனுள் மச்சுவீட்டை இருத்தி சாதித்தது உயர்ந்த பிரார்த்தனைகளில் சிறந்தது.

- ❀ இது மனிதனால் முடியாது.
- ❀ செய்த சேவை இந்தஅன்பருக்கு அஸ்திவாரமாக அமைந்ததால் கனவு, நனவாயிற்று.
- ❀ நம்பிக்கை உயரப் பிரார்த்திப்பவரைக் காண்பதரிது.
- ❀ பிரார்த்தனை பலிப்பது அரிதினும் அரிது.
- ❀ அருள் தாயாருக்கு இக்கதையில் அதையும் கேளாமல் தருகிறது.



கணவர் - மனதால் போற்றினால் போதாதா?

மனைவி - செயலுக்கு எண்ணத்தைவிட சக்தியுண்டு:

✡ பெரியவர் ஒருவரும் இளைஞர் ஒருவரும் ரோட்டில் நடைபாதை மீது நடந்துகொண்டிருந்தபொழுது, எதிரேயுள்ள நடைபாதையில் போய்க் கொண்டிருந்த தொழிலதிபர் விரைவாக ஓடிவந்து இளைஞரை அவர் பாக்டரி துவக்கவிழாவுக்கு அழைத்தார். அவர் போனபின் இளைஞர் பெரியவரை, "ஏன் இப்படி இத்தொழிலதிபர் ரோட்டில் அசம்பாவிதமாக ஓடிவருகிறார்" எனக் கேட்டார். "இத்தொழிலதிபருக்கு நீ உதவி செய்திருக்கிறாய். அவர் விழாவிற்கு உன்னை அழைக்கவில்லை. அதனால், அவர் உன்னை அழைக்கவேண்டும்என நான் ஆழ்ந்து நினைத்தேன். என்எண்ணம் செயல்பட்டு அவர் ஓடிவந்தார்" எனப் பெரியவர் விளக்கம் தந்தார். எண்ணத்திற்கு சக்தியுண்டு.

✡ உணர்ச்சி எண்ணத்தைவிட சக்தி வாய்ந்தது.

✡ செயல் உணர்ச்சியைவிடத் திறனுடையது.

✡ ஆன்மீக எண்ணம் செயலையும் ஆட்கொள்ளவல்லது.

✡ ஆன்மீகச் செயல் அனைத்திலும் சக்தி வாய்ந்தது.

✡ உட்கார்ந்த இடத்திலிருந்து ஒரு யோகி தன்சக்தியை உலகில் எங்கும் அனுப்பலாம்என்று பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

✡ சும்மா உட்கார்ந்து நினைப்பது வெறும்எண்ணம்.

✡ அறிவோடு திட்டமிட்ட எண்ணம் திறனுடையது.

✡ ஆத்திரம் எழும்பொழுது, பாசம் வெளிப்படும்பொழுது, அதனால் உந்தப்பட்டு அதே எண்ணம் தீவிரமாகச் செயல்படும்.

✡ உடல் தானேசெயல்படுவது அதைவிடப் பலமானது.

✡ Ascent, descent, மேலே செல்வது, கீழே வருவதுஎன இரண்டு பாதைகள் உள்ளன.

✡ மேலே செல்லும் பாதையில் மனிதன் உடல் -> உயிர் -> மனம் -> ஆன்மா என்று வளர்ந்துவிட்டான். இனிக் கீழே வரவேண்டும்.

ஆன்மாவை எட்டியபின் ஆன்மா மனத்தில்எழுவது -> உயிரில் வெளிப்படுவது -> உடலில்வெளிப்படுவது என்பது கீழே வரும் பாதை. எனவே செயல் முதற்கட்டத்திலும், முடிவான கட்டத்திலும் உள்ளது.

- ❀ முதற்கட்டம் எளியது.
- ❀ முடிவான கட்டம் சிறப்பான சிகரம்.
- ❀ செயலுக்கு எண்ணத்தைவிட சக்தியுண்டு என்பது முடிவான கட்டம்.
- ❀ மனம் ascentஇல் கீழிருந்து மேலேபோவதில் உடலைவிடத் திறமானது.
- ❀ கீழே வருவதில் உடல் மனத்தைவிடத் திறமையுள்ளது.

✡ இக்கதையில் எச்செயல், எவரால், எந்த நிலையில் செயல்படுகிறதுஎன அறிய முயல்வது வாழ்வில் யோகத்திற்குரிய ஆராய்ச்சி.

✡ "என் வாயால் ரங்கன் 'மந்திரியாகிவிடுவான்' என்று கூறினால், அது பலித்துவிடும் என்றால், நான் அதைக் கூறமாட்டேன்'' என்று பெரியவன் சொல்வது அவன் வீட்டுச்சூழலில் அவனுடைய சொல்லே பலித்துவிடும் என்று கூறுகிறது. அந்நிலையில் மனதால் போற்றினால் போதும், நடந்துவிடும். சாதாரணமாக அது போதாது.

கணவர் - பிள்ளைகளைச் செய்யச் சொல்வோம்:

✡ ஒரு வேலை என்றால் நம்மைத்தவிர யார் செய்யலாம்எனத் தோன்றும்.

ஏன் அன்னை நமக்காக இதைச் செய்யக்கூடாதுஎன நினைப்போம்; பிரார்த்திப்போம்.

நமக்குப்பதிலாக பிள்ளைகள் செய்யக்கூடாதாஎனக் கருதுவோம்.

செய்பவருக்குப் பலன்போகும். ஒருவர் செய்வதால் பலன் அடுத்தவருக்கு வாராது.

✡ இந்தியாவை எப்படி முன்னேற்றலாம் என்பதற்குப் பதிலாக அமெரிக்கா செய்யுமா, ஐ.நா. செய்யுமா, சர்க்கார் செய்யுமாஎனப் பலரும் பேசுவதை



நாம் கேட்கிறோம். இந்தியா முன்னேற வேண்டுமானால், இந்திய மக்கள் நாட்டை முன்னேற்ற வேண்டும்.

✡ கணவர் மனநிலை எல்லாவிஷயங்களிலும் அப்படிப்பட்டதே.

- ❀ கம்பனியைப் பார்ட்னர் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- ❀ அன்னையை மனைவி கவனித்துக்கொள்ள வேண்டும்.
- ❀ அதிகாரம் தமக்கு, பொறுப்பு மனைவிக்கு என்பது அவர் நிலை.
- ❀ மனம் அப்படியிருந்தால் தண்ணீர்ப்பஞ்சம் போக பிள்ளைகள் தண்ணீரைச் சிக்கனமாகச் செலவுசெய்யவேண்டும்என்று நினைக்-கிறார்.

✡ வாழ்க்கையில் பிழைக்கமுடியாதவர் ஒருவர். பெரியவீட்டு மாப்பிள்ளை. அவருக்கு உதவி செய்ய எவர் முன்வந்தாலும், எந்தத் தொழிலை அவருக்குச் சிபாரிசு செய்தாலும் அவர், ''ஒரு ஆள் போட்டுப் பார்க்கலாம்'' என்பார். அதுபோன்ற 'ஆள்' வேலை கிடைக்காமல் நடுத்தெருவிலிருக்கும்பொழுது பேச்சு இப்படி வருகிறது. அவருக்கும் ஒரு தொழில் வைத்துக்கொடுத்து பெரிய வருமானம் சம்பாதித்தபின், 'ஆள்' போட்டுப்பார்க்கலாம் என்ற மனப்பான்மை அத்தொழிலையும் அழித்துவிட்டது.

எவர் செய்கிறாரோ, பலன் அவருக்குப் போகும் என்பதுடன் பிறர் செய்ய வேண்டும்என நினைப்பவர் திட்டத்திலிருந்து விலக்கப்படுவார் என்பது அனுபவம், சட்டம்.

✡ பூஜையைப் பெரிதாகக் கருதும் குடும்பம் அடுத்த தலைமுறையில் பிள்ளைகளைப் பூஜைசெய்யச் சொல்வார்கள். அதற்கு அடுத்த தலைமுறையில் பூஜையில்லாமல் போகும்.

உடலால் செய்யும் வேலையைப் பிறரிடம் கொடுக்க முடியும்.

மனத்தால் செய்யும் வேலையைப் பிறரிடம்தர விரும்புவது பொருந்துமா?

ஒருவருக்காக அடுத்தவர் படிக்க முடியுமா?

ஒருவருக்காக அடுத்தவர் மருந்துண்ண முடியுமா?

ஒருவர் உணர்ச்சியை அடுத்தவர் அறிய முடியுமா?

ஏன் மனம் நமக்காகப் பிறர் செய்ய வேண்டும், நம் வேலையைப் பிறர் செய்ய வேண்டும்என நினைக்கிறது?

இது என்ன பொருத்தமற்ற எண்ணம்?

அந்த ஆராய்ச்சி பெரிய ஆராய்ச்சி.

மனைவி - எண்ணம் நம்முடையதன்று;
கணவர் - புதியதாக இருக்கிறதே:

✡ எண்ணம் நம்முடையதன்று என்பது ஆன்மீக உண்மை. ஆன்மீகச் சம்பந்தமில்லாதவர்க்கு அது புதிய கருத்து.

✡ காற்று உலவுவதுபோல் எண்ணம் ஆகாயத்தில் உலவுகிறது. நம் மனத்திலும் நுழைந்து வெளிவருகிறது. எண்ணம் நமக்குரியதன்று.

❀ எண்ணம் நமக்குச் சொந்தமானதில்லை.

❀ உணர்ச்சி நமக்குச் சொந்தமானதில்லை.

❀ உடலே நம்முடையதன்று.

✡ உலகில் உள்ளது ஒரு மனம்.

உலகில் உள்ளது ஒருடல்.

உலகில் உள்ளது ஓர் உயிர்.

✡ மனம் என்பது ஒரு லோகம்.

அது பரந்த வெளி.

நம் மனம் அதனுள் உள்ள ஒரு பகுதி.

✡ புவியில் காணி, கொல்லை, நிலம் என்றில்லை.

✡ பூமாதேவியின் அகண்ட மார்பு பூமி.

✡ நாம் அங்கு ஒரு எல்லையை ஏற்படுத்தி என்மனை, என்நிலம்எனக் கூறுவதுபோல் மனம், உயிர், உடல், ஆத்மாஎன உலகில் உள்ளது.



நாம் அதனுள் ஒரு புள்ளி. அந்தப் புள்ளியை நாம், நம் எண்ணம், நம் மனம்எனக் கூறுவது மனித இயல்பு.

✡ கடலை சாம்ராஜ்யங்கள் அப்படிப் பங்குபோட்டுக்கொண்டன.

கடல் ஆண்டவன் ஏற்படுத்தியது.

நாம் கடலைப் பகுதிகளாகப் பிரித்துப் பெயரிட்டிருக்கிறோம்.

✡ மனமே உலகில் ஒன்றென்றால், எண்ணம் நம்முடையதுஎனக் கூற முடியுமா?

✡ ஆற்றில் நீர் ஓடுகிறது.

✡ நம்மூர் வழியாக ஓடுகிறது.

✡ நம் ஆற்றில் எனப் பேசுகிறோம்.

✡ இது மரபு.

✡ ஆறு அனைவரும் புரிந்துகொள்வது.

✡ எண்ணம் எவரும் புரிந்துகொள்ளாதது.

✡ ஆன்மீகவாதிகள் மட்டும் அறிவது எண்ணத்தின் விவரம்.

✡ கணவர் அப்பாவி, எதையும் அறியாதவர்.

✡ இது தத்துவ விசாரம்.

✡ அவருக்கு இது புதிய எண்ணம்.

✡ அவர் பிரார்த்தனையையே பிள்ளைகளிடம் ஒப்படைக்க முயல்பவர்.

மனைவி - நம்மை எண்ணத்திலிருந்து பிரிப்பது கஷ்டம்:

✡ பிரிக்கும் கருவி மனம்.

✡ ஓர் எண்ணத்தை மற்ற எண்ணங்களினின்று பிரித்தால்தான் புரியும்.

✡ பல விஷயங்களை ஒன்றாகப் பேசினால், "போட்டு குழப்பாதே. ஒரு விஷயமாகப் பேசு. தெளிவாக இருக்கும்" என்கிறோம்.

✡ எண்ணத்தைச் சிந்திக்க அதை மற்றஎண்ணங்களினின்று பிரிக்க வேண்டும். மனம் எண்ணத்தை விஷயத்திலிருந்து பிரித்துத் தனியே

சிந்தனை செய்வதை (intellectuality) அறிவுக்குரிய ஆராய்ச்சி என்கிறோம். கம்பனிக் கணக்கு என்பது கம்பனியை நாம் புரிந்துகொள்ள உதவுவது. ஆடிட்டர் கம்பனியை தனியே எடுத்து தூரவைத்துவிட்டு கணக்கைத் தனியே எடுத்து ஆராய்ச்சி செய்து வரி எவ்வளவு கட்டவேண்டும்என நிர்ணயிப்பார்.

✡ நாமே எண்ணம். நாமும் நம் எண்ணமும் ஒன்றே. நம் எண்ணம் நமக்குப் புரிய நாம் நம்மிலிருந்து எண்ணத்தைப் பிரித்துப்பார்க்க வேண்டும். நம்மில் பகுதியான எண்ணத்தை நம்மிலிருந்து பிரிக்கமுடியாது. அதைச் செய்வது மனம்.

❀ அதனால் மனம் சிந்தனைக்குரிய சிறப்பான கருவி.

❀ அதே காரணத்தால் முழுமையை - சத்தியம், பிரம்மம் - அறிய மனம் தடை.

❀ நம் எண்ணத்திலிருந்து நாம் பிரிவது சிந்தனையைச் சிறப்பாக்கும்.

❀ நம் மனத்திலிருந்து நாம் பிரிவது யோகத்தைப் பூர்த்திசெய்யும்.

❀ பிரிவது ஆராய்ச்சிக்கும், வாழ்வுக்கும் அவசியம்.

❀ சேர்வது யோகத்திற்கும், பரிணாமத்திற்கும், பிரம்ம ஜனனத்திற்கும் அவசியம்.

✡ பிரிவதையும், சேர்வதையும் ஒரே சமயத்தில் ஏற்பது பூரணயோகம்.

✡ குடும்பம் என்றால் இரகஸ்யமில்லை.

✡ குடும்பத்திலும் முக்கியமானவரிடமிருந்து மறைக்க வேண்டிய இரகஸ்யம் உண்டு. அதை மறைக்கும் திறனற்றவர் குடும்பத்தைப் பெரிய நேரத்தில் காப்பாற்றப் பயன்படமாட்டார்.

✡ எதையும் குடும்பத்திலிருந்து மறைக்காதவர், முக்கிய விஷயத்தை குறிப்பிட்டவரிடமிருந்தோ, குடும்பத்திலிருந்தோ மறைக்கும் திறன் உள்ளவரானால் அவர் குடும்பத்திற்குச் சேவை செய்யமுடியும். குடும்பத்தைக் காப்பாற்றமுடியும்.

✡ இது முடியாது என்பவருக்குப் பூரணமில்லை.

✡ எதுவும் முடியும் என்பவருக்குப் பூரணமுண்டு.



மனைவி - எண்ணத்திற்குப் பின்னால் உணர்வும், செயலும் உள்ளன:

✡ அறிவுக்குரியது எண்ணம்.

பிராணனுக்குரியது உணர்வு.

உடலுக்குரியது செயல்.

✡ அறிவு மட்டும் ஏற்பட்டால் போதாது, அது ஏற்றாலும் போதாது. அறிவு ஏற்பதை உணர்வும், உணர்வு மகிழ்ந்து ஏற்பதை உடல் உவந்து ஏற்பதும் காரியம் பூர்த்தியாக அவசியம்.

✡ ஏற்றால் போதாது, அக்கறை வேண்டும். அதுவும் போதாது, திறமையுள்ள உழைப்பு வேண்டும் என்று அதையே வேறு வகையாகக் கூறலாம். பையனிடம் படிக்கச் சொன்னால் கசங்குகிறான். விளையாடத் தயாராக இருக்கிறான். படிக்காவிட்டால், படித்து 95க்கு மேற்பட்ட மார்க் வாங்காவிட்டால் எதிர்காலமில்லைஎன நாம் அவனுக்கு விளக்கிச் சொல்கிறோம். 'சரி' என்கிறான். அது அறிவு ஏற்பது. TV பார்ப்பதில் உள்ள ஆர்வம், வாரப்பத்திரிகை படிப்பதில் உள்ள ஆர்வம் படிப்பில் வருமா? அது உணர்வு ஏற்பது. கிரிக்கெட் ஆடும்பொழுது வெய்யில் தெரியாது, உடல் வலிக்காது, உடலே ஆட ஆர்வம்கொள்ளும். படிக்க, எழுத, படம் (map) போட உடல் அப்படி ஆர்வம் கொள்வது செயலும் ஏற்பதாகும்.

✡ மேற்சொல்லியது (psychological) மனத்தைப்பொருத்த உண்மை.

✡ பூரணயோகத்தில் மேலும் ஓர் உண்மையுண்டு.

✡ மனத்திலிருந்து செயல் உணர்வுக்கும், உடலுக்கும் இறங்கிப்போகும் பொழுது அதே சமயம் அச்செயல் மௌனம், ஜோதி, ஞானம் ஆகியவற்றை நாடி உயர்ந்து எழுகிறது.

மனத்திலிருந்து உணர்வுக்குச் செயல் நகரும்பொழுது - உணர்வு செயலை ஏற்கும்பொழுது - மனத்திலிருந்து செயல் மௌனத்திற்குப் போகிறது. நினைத்துச் செய்த காரியம், நினைவு எழுமுன்

பூர்த்தியாகிறது. அதனால் அதிகமாகப் பூர்த்தியாகிறது. நினைவு செய்ததை மௌனம் செய்கிறது.

✡ சத்தியஜீவன் பிறக்க அவன் மனத்தில் சைத்தியப்புருஷனாக அவதரித்து, ஒரே சமயத்தில் கீழே உணர்ச்சி, உடல்என சைத்தியப்புருஷன் வளரும்பொழுது, மேலே சைத்தியப்புருஷன் மௌனம், ஜோதி, ஞானம் என்ற நிலைகளில் ஜனித்து சத்தியஜீவியத்தை எட்டுகிறான்.

❀ எண்ணத்திற்குப் பின்னாலுள்ள உணர்வும், செயலும், வெறும் உணர்வு, செயலன்று. அவை உணர்வின் சைத்தியப்புருஷன், செயலின் சைத்தியப்புருஷன் என்பதால் அவை பலம் மிகுந்தவை.

❀ மௌனத்திலுள்ள எண்ணம் Silent Will எனப்படும்.

❀ ஜோதியில் உள்ள எண்ணம் கண்முன் காட்சியாக வரும். வந்தால், பருத்தி புடவையாகக் காய்த்ததுபோல் பலிக்கும்.

❀ அதற்கடுத்த நிலை ஞானம் (intuition).

ஞானத்தின் எண்ணம் நினைத்தமாத்திரம் செயல் தன்னைப் பூர்த்தி செய்துகொள்ளும்.

கணவர் - அவற்றை எப்படிப் பிரிப்பது?

மனைவி - அப்படி அவற்றைப் பிரித்துச் சமர்ப்பணம் செய்தால் அந்த நேரம் மழை பெய்யும்:

✡ மௌனம் எண்ணத்தை மனத்திலிருந்து பிரிக்கும்.

✡ விரக்தி அதிகமான நேரம், நாம் கடமைகளை மறப்பதில்லை. அவற்றைத் தொடர்ந்து செய்கிறோம். அதை நாம் செய்யவில்லை, யாரோ செய்கிறார்கள்எனத் தோன்றும். விரக்தி நம்மைச் செயலிலிருந்து பிரித்துவிடுகிறது. (Hypnotic sleep) மந்திரத்தால் மயக்கம் போட்டவன் பேசுகிறான். அது அவன் பேசுவதில்லை. அடுத்தவர் எண்ணத்தை அவன் பேச்சாகப் பேசுகிறான். கவலையில் தோய்ந்த நேரம், சந்தோஷத்தால் மலர்ந்த நேரம் நமக்கு எதுவும் புரியாது. கேட்ட கேள்விக்குப் பதில்



சொல்வோம். அது நாம் கூறும் பதிலில்லை. நம்மையறியாமல் எழும் பதில். அந்த நேரம் நாமும், நம் பேச்சும் பிரிந்துள்ளன.

❀ மௌனம் அதேபோல், எண்ணத்தை நம்மிடமிருந்து பிரித்துவிடும்.

❀ கவலை, சந்தோஷம், மந்திரம் பிரிப்பதுபோல் மௌனமும் எண்ணத்தை நம்மிலிருந்து பிரிக்கும்.

✡ அந்த நேரம் செய்யும் சமர்ப்பணம் மௌனத்தின் சமர்ப்பணம், பலமானது. தண்ணீர்ப்பஞ்சம் மனதிலிருப்பதால் மழை உடனே பெய்யும்.

✡ சமர்ப்பணம் உடனடியாகச் செயல்படும்.

✡ சமர்ப்பணம் செயல்படவில்லை என்றால் தடை இருக்கும்.

✡ தடைகளில் தலையான தடை, எண்ணம்.

✡ எண்ணம் விலகி மௌனம் குடிகொள்ளுமானால் பலன் உடனடியாக எழும்.

✡ எண்ணத்தைப் பிரித்ததைப்போல் உணர்வைப் பிரித்தால் சமர்ப்பணம் அதிக வலுப்பெறும்.

✡ செயலை நம்மிடமிருந்து பிரிப்பது - செயலுக்குரிய பழக்கத்தைப் பிரிப்பது - உச்சகட்ட வலுவைச் சமர்ப்பணத்திற்குத் தரும்.

✡ எண்ணம் நம்முள் நுழையும்பொழுது நாம் சிந்திக்கிறோம். சிந்தனையால் நாம் உள்ளே வந்த எண்ணத்துடன் இணைந்துவிடுகிறோம்.

✡ சிந்தனையை நிறுத்தினால் எண்ணமும் நாமும் பிரிவோம்.

✡ சிந்தனையை நிறுத்துவது ஓடும் நதியைத் தடுத்து நிறுத்துவது போலாகும். அதற்கு அதிக சக்தி வேண்டும் என்பதால், பலனும் அதிகம் உண்டு.

சுமார் 3, 4 நாட்கள் கணவரும், மனைவியும் மழையை சமர்ப்பணம், பிரார்த்தனை, கவனத்தால் நினைத்தவுடன், பிள்ளைகள் அதையே தாமாக எழுப்பி பின்பற்ற வேண்டும்எனப் பேசினர். பெருமழை தொடர்ந்து பெய்தது. அந்த ஆண்டு குறை நிறைவாயிற்று:

✡ இது ஒரு சோதனை, முடிவான முறையில்லை. சோதனையானாலும் பலன் முழுமையாக வந்தது.

✡ முடிவான முறை என்பது பிரச்சினைக்குரியவர் அனைவரும், தீர்வுக்குரிய தடைகள் அனைத்தையும் களைந்து, தீர்வுக்குரிய எல்லா முறைகளையும் பின்பற்றுவது.

✡ இங்குப் பிரச்சினை நாட்டில் மழையில்லை. நாட்டு மக்கள் அனைவரும் விரயம், அலட்சியம் போன்ற எல்லாக் காரணங்களையும் களைந்து, பிரார்த்தனை, சமர்ப்பணம், கவனம் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும். அதற்கு வழியில்லை.

✡ அதற்கடுத்தது தமிழ்நாட்டிலுள்ள எல்லா அன்பர்களும் தமிழ்நாட்டின் சார்பாக அதைச் செய்யவேண்டும். தாயார் தமிழ்நாட்டு அன்பர்கள் அனைவரையும் அப்படிக் கேட்க இயலாது. அப்படிக் கேட்டால் அவர்கள் செய்யப்போவதில்லை.

✡ அதற்கடுத்தது இக்குடும்பத்தில் அனைவரும் தண்ணீர் மட்டுமல்லாது, எல்லாப் பொருட்களிலும் இம்முறையைப் - விரயம் போன்றதை விலக்கி, சமர்ப்பணம் போன்றதை முழுமைப்படுத்தி - பின்பற்றவேண்டும். அதைக் குடும்பம் பேசினால் நல்லது. தாயாரே கேட்பது பலன் தாராது.

- ❀ நாட்டிற்குப் பதிலாக அன்பர்கள் (அனைவரும்) செய்வது பலிக்கும். ஏனெனில், அன்பர்கள் சூழல் அன்னைச்சூழல். அதனால், அவர்கள் தண்ணீரில் மட்டும் அம்முறையைப் பின்பற்றினால் போதும்.
- ❀ அன்பர்கட்குப் பதிலாக ஒரு குடும்பம் மட்டும் செய்யும்பொழுது, தண்ணீர்ப் பிரச்சினை தீர எல்லாப் பொருள்களிலும் - அரிசி, பருப்பு, துணி, பணம், மின்சாரம் - அக்கவனத்தை செலுத்தினால் அது பலிக்கும்.
- ❀ தாயார் மட்டுமே அதற்குத் தயாராக இருப்பதால் குடும்பத்தைக் கேட்காமல் மனதால் செய்ய ஆரம்பித்தபொழுது கணவர் நேரடியாகப் பங்குகொண்டார். பிள்ளைகள் தாமே அப்பிரச்சினையை எடுத்துப் பேசி ஏற்றுக்கொண்டதால் அது முதல் response சகுனம்; நல்ல சகுனம். இச்சிறு வேலைக்கு (token) நாட்டின் ஆண்டுக்குக் குறைவான தண்ணீர்ப்பஞ்சம் தீர்ந்தது. ஒருவருடைய சிறப்பு உலகை உய்விக்கும் என்று இதைப் பகவான் கூறுகிறார்.



✡ குடும்பம் கம்பனி விஷயத்தில் தாயார் போலிருந்தால், தாயார் குடும்பத்தை விட்டு அன்னையை ஏற்றால் பிரார்த்தனை தேவைப்படாது.

- ❀ அனைவரும் அனைத்து விஷயங்களிலும் இம்முறையைக் கையாள வேண்டும்.
- ❀ அனைவரும் அன்னையை அனைத்து விஷயங்களிலும் அன்னைக்-காக ஏற்கவேண்டும்.
- ❀ 'அம்மா செய்யட்டும்' என்ற மனப்பான்மை மாறவேண்டும்.
- ❀ அலட்சியம், கேலி உதவாது.
- ❀ பலனைக் கருதாது அன்னையை நாடவேண்டும்.
- ❀ ஆதாய மனப்பான்மை கூடாது.
- ❀ போட்டியிடக்கூடாது.
- ❀ சுருக்கமாகச் சொன்னால், குடும்பம் பண்புள்ள குடும்பமாக வேண்டும்.

*தொடரும்.....*

தொடரும்.....

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அளவுகடந்த தெய்வீகச் சந்தோஷத்தின் அபரிமிதமான சக்திகளை மனிதன் வெட்கத்திலும், மானத்திலும் புதைத்து வைத்திருக்கிறான். உடலுக்குரியது வெட்கம்; உணர்வுக்கு உரியது மானம்.

***உடலுக்குரியது வெட்கம்.***

***உணர்வுக்குரியது மானம்.***

## P.64 In her fancies of the moment and its mood.

**அவள் நினைவும் நேரத்தின் வேகமும்.**

- ✡ இவ்எளிய உலகின் எழில் நடை.
- ✡ ஊடுருவும் பார்வைக்கு அவற்றின் ஆழமும் விநோதமும் தெரியும்.
- ✡ இயற்கையின் எளிய ரூபங்கள் உண்மையில் அற்புதத்தின் அலங்காரம்.
- ✡ சாட்சியின் பார்வை வலிமையின் அசைவைக் காணும்.
- ✡ அவள் பிரபஞ்ச நர்த்தனம் திரை மறைவிலிருந்து எழும்.
- ✡ எழுச்சி தரும் நிகழ்ச்சி, ஆன்மாவுக்குரிய தண்டனை.
- ✡ அவள் சக்தி நடத்துகிறது; ஆதரிக்கும் அவள் கரம் அழிக்கும்.
- ✡ மோனத்தில் அவள் சொல், நம் இதயக்கதவைத் தட்டும்.
- ✡ சிகரத்தைக் கடந்த சிறந்த மௌனம்.
- ✡ அவள் அடியும், நுனியும் ஆகர்ஷிக்கும் நம் ஆன்மா.
- ✡ வாழ்வெனும் நம் ஆடையை புனையும் அவள் செயல்.
- ✡ நம்மைக் கண்டும், இழந்தும் நிற்கும் அவள் முழுமையான புனிதம்.
- ✡ இனிமையும், கசப்பும்; பெருந்தன்மையும், கயமையும்.
- ✡ பயங்கர அழகின் பவித்திரம்.
- ✡ பிரபஞ்சத்தின் அவள் கட்டிய பிதிராஜ்ஜியம்.
- ✡ அவளுடைய சூட்சுமமான பெரிய சட்டங்கள் அவனை ஆட்கொள்ளும்.
- ✡ அவள் மடியில் தவழும் குழந்தை அவன் ஜீவியம்.
- ✡ அகன்ற அவள் வீச்சு அவன் கருத்து நடம் செய்யும் மைதானம்.
- ✡ அவள் அகன்ற சோதனைக்கு அவன் ஜீவன் ஆராய்ச்சிக்கூடம்.
- ✡ காலத்தின் ரூபங்களை ஞானத்துடன் கட்டிப் போடுபவள்.
- ✡ குறுகிய மனத்தின் பெருகி வரும் தவறு.
- ✡ விதியின் தோற்றமான விளையாட்டான சமயம்.
- ✡ மரணமெனும் ஆட்டம்; வேதனை எனும் இருள்.



- ✡ அழியாத ஜீவனின் மாறிய போராட்டம்.
- ✡ புவியெனும் முழுமையில் ஆத்மா எனும் சூட்சும அணு.
- ✡ அவள் கைவண்ணத்தின் வர்ணம் அவன் உடல்.
- ✡ மரணத்தின் அரங்கில் உயிரோடுள்ள ஆத்மா.
- ✡ ஜீவனின் சந்துபொந்துகள்மூலம் அவன் காலத்தைக் கடந்தான்.
- ✡ இருளிலிருந்து மரணமிலா ஜோதிக்கு அவளைக் கொண்டு சேர்த்தான்.
- ✡ இப்பெரும் சரணாகதி அவன் சுதந்திரத்தின் புனிதச் சிகரம்.
- ✡ பிரபஞ்சத்தைக் கடந்த அவனது சக்தி அவளைச் சரணடைகிறது.
- ✡ பிரபஞ்ச அஞ்ஞானமெனும் அவளுடைய புதிர்.
- ✡ அவளுடைய புரியாத புதிர்.
- ✡ அழியும் அவதியில் எழுந்த ஜீவன்.
- ✡ அவளிட்ட அச்சில் அவன் தன்னை வார்க்கிறான்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**மனிதப் பூரணம் (Perfection) என்பது குறையான நிலையில் பூரணமான வெளிப்பாடு.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வின் அமைப்பு முறையைச் சொல்லி, சத்தியஜீவிய அமைப்புக்கு நம்மை பகவான் போகச் சொல்லும்பொழுது, இடையேயுள்ள அமைப்புகளை - உணர்வு, மனம் - புறக்கணிக்கிறார். ஏனெனில், உடலின் அமைப்பு, உண்மையில் மனத்தின் அமைப்பாகும். மனமே ஜடத்தை ஆள்வதால் அது உண்மையில் மனத்தின் அமைப்பாகும்.

*முடிவான கட்டமே முதற் கட்டம்.*

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**875) பெரும் மாறுதல், திடீரென எழும் வளர்ச்சி, அடிக்கடி அருள் செயல்படுதல் ஆகிய நிலையிலுள்ளவர்க்கு அடிக்கடி பரிசுகள் கிடைக்கும். எதிர்பாராத பெரும்பலன் வரும். அவர்கள் மனநிலையின் பக்குவத்திற்கேற்பவே அவை அமையும். சூழ்நிலையால் அவை நிர்ணயிக்கப்படா. உண்மையில் அவை சூழலைச் சுட்டிக்காட்டுபவை. சூழல் அவர்கட்கு அனுப்பும் அழைப்பாகவும் அமையும்.**

*அதிக ஆர்வம் அனைவரையும் ஈர்க்கும். மேலும் உயர்வது தனிமையைத் தரும்.*

- ✡ வாழ்வில் அனைவரும் போற்றுவது, பாராட்டுவது, நாடுவது, துடியாகச் செயல்படுவது அதிக வருமானம் பெற.
- ✡ வருமானத்தைவிட எல்லோர் மனத்தையும் கவர்வது பிரபலம், நல்ல பெயர்.
- ✡ அதையும் கடந்தது அந்தஸ்து, செல்வாக்கு.
- ✡ அந்தஸ்தும், செல்வாக்கும் பெற்றபின் பரிசுகள் கிடைக்க ஆரம்பிக்கும். அடிக்கடியும் கிடைக்கும். பல்வேறு பரிசுகளும் கிடைக்கும்.
- ✡ வரும் பரிசும் பெறுபவர் மனநிலையைப் பொருத்தது; அந்தஸ்தைப் பொருத்தது.
  - ❀ ஒரே தகுதியுள்ள இருவர்க்கு மனநிலை பரந்து விரிந்தும், சாதாரணமாகவுமிருந்தால் ஒருவர்க்குப் பல்கலைக்கழகம் D.Sc. பட்டத்தை கௌரவப் பட்டமாகக் கொடுக்கிறது. மனநிலை பரந்து, உயர்ந்து இருப்பவர்க்கு அதே தகுதிக்கு ஆசிய நோபல் பரிசு எனும் மாக்ஸேஸே விருது வருகிறது.



  - ❀ அதுவே ஒரு பள்ளி ஆசிரியருக்கு கல்லூரியில் ஆசிரியராக வேலை கிடைப்பது பரிசு. மனப்பக்குவம் வேறு வகையில் உயர்ந்திருப்பதால் அதே தகுதியுள்ள அடுத்தவர்க்குப் பல நூல்கள் வெளியிட வாய்ப்பு எழுகிறது.
  - ❀ ஒரே தகுதியுள்ள இருவர்க்கு ஒரே ஸ்தாபனத்தில் ஒருவருக்கு ஏராளமாகத் திருட வாய்ப்பும், அடுத்தவர்க்கு அபரிமிதமாக விரயம் செய்யும் வாய்ப்பும் எழுகிறது.
- ✡ அன்னை வந்தபின் அனைத்தும் உள்ளிருந்து வெளியே வரும்.
- ✡ அன்னை வந்தபின் நாம் பெறும் பட்டம், அமெரிக்கப் பட்டமாக மாறும்.
- ✡ அன்னை வந்தபின் சூழல் நம்மைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, சூழல் நமக்குக் கட்டுப்படும்.
- ✡ அன்னை வந்தபின் ஆக்ரா பயணம் அமெரிக்காவில் நயாகராவைப் பார்க்கும் பயணமாக மாறும்.
- ✡ அன்னை வந்தபின் நாம் தேடிப் போன அனைவரும், நம்மை நாடி வருவார்கள்.
- ✡ உள்ளூரில் மேடையில் பேச சந்தர்ப்பமில்லாதவர்க்கு உலக மேடை கிடைக்கும்.
- ✡ சிருஷ்டி ஆண்டவனின் இச்சைப்படி நடக்கிறது.
- ✡ மனிதவாழ்வு என்பது அவனே நிர்ணயிப்பது.
- ✡ சமூகம் தன்வாழ்வைத் தானே நிர்ணயித்துக்கொள்கிறது.
- ✡ அகம் புறத்தை நிர்ணயிக்கிறது.
- ✡ புறம் ஒருபொழுதும் அகத்தை நிர்ணயிக்காது.
- ✡ புறம் அகத்தைப் பிரதிபலிக்கும்.
- ✡ ஒருவர் வாழ்வில் பெரும் மாறுதல் ஏற்பட்டபொழுது நாம் அப்பொழுது சூழலில் இருந்த சந்தர்ப்பத்தைப் பார்த்து, அதனால் நடந்துள்ளன அறிகிறோம்.
- ✡ காரணம், காரியத்தில் முடிகிறது.
- ✡ எது முதல்என்பது கேள்வி.

✡ காரணத்தால் காரியம் நடந்ததுஎனப் புரிந்துகொள்வது அறிவு வளர உதவாது.

✡ C.சுப்ரமணியத்தை நேரு ஆவடி காங்கிரஸில் கண்டு, டெல்லிக்கு அழைத்துப் போனார்; இந்திரா நேருவின் மகள் என்பதால் பிரதமர் ஆனார்; காமராஜை நேருவுக்குப் பிடித்துவிட்டது - இவை அதிர்ஷ்டம் என நாம் புரிந்துகொள்கிறோம். இது தலைகீழேயிருப்பதால் அறிவு வளர உதவாது.

✡ சுப்ரமணியம், இந்திரா, காமராஜ் ஆகியவர்க்கு மனம் பக்குவம் அடைந்துவிட்டதால் நேரு கண்ணில் பட்டார். நேருவுக்குப் பிடித்து விட்டது என்றால் நாம் மேலும் அவர்களைப் புரிந்துகொள்ளவும், அதன் மூலம் மற்றவற்றைப் புரிந்துகொள்ளவும் உதவும்.

✡ அனைத்திற்கும் ஆர்வம் ஆத்மாவில்.

✡ அனைத்திற்கும் ஆர்வம் அகத்தில்.

✡ சமுதாயமோ, புறச்சூழலோ மனிதனை நிர்ணயிக்கவில்லை என்பது ஸ்ரீ அரவிந்தம்.

✡ அதிர்ஷ்டம் என்பது ஆத்மாவின் அனுபவம்.

✡ ஆத்மா வளர்வது ஆன்மீகம்.

✡ ஆன்மா வாழ்வில் வெளிப்படுவது அதிர்ஷ்டம்.

✡ ஆன்மா வாழ்வை நடத்துவது அருள்.

✡ வாழ்வு ஆன்மாவுக்குக் கட்டுப்பட விழைவது பேரருள்.

✡ இவற்றை நிர்ணயிப்பது human choice நமது பிரியம்.

✡ மனிதன் பிரியப்பட்டால் அதிர்ஷ்டம் வரும்.

✡ நம் அதிர்ஷ்டம் நம் கையில்.

✡ நாம் தரித்திரத்தை நாடுவது நம் பழக்கம்.

✡ இறைவன் அதைத் தடுப்பதில்லை.

❀❀❀

**876) ஆர்வம் அதிகப்பட்ட நாட்களில் அநேகர் உங்களை நாடி வருவதைக் காணலாம். மேலும் ஆர்வம் உயர்ந்தால் வருபவர்கள் குறைந்து மறைவதுடன், வீட்டிலுள்ளவரும் போய் உங்களைத் தனியே விடுவதைக் காணலாம்.**

*ஆர்வ மிகுதியால் வரும் தனிமை.*

மரம் பழுத்தால் வௌவால்கள் தானே மரத்தைத் தேடி வரும். ஆர்வம் என்பது நாம் இறைவனை நோக்கிப் போவது. உடனே அதே ஆர்வமுள்ள அனைவரும் நம்மை நோக்கி வருவார்கள். மகாபாரதக் கதை சொல்லும் பிரசங்கத்திற்கு ஏராளமாகக் கூட்டம் வரும். அதன் உயர்ந்த பகுதியான கீதைப் பிரசங்கத்திற்குக் கொஞ்சம் பேரே வருவார்கள்.

✡ அனைவரும் ஆண்டவன் மீது ஆர்வம் உள்ளவர்கள்.

✡ அதனால் நாம் அவனை நோக்கிப் போகும்பொழுது உடன் வருவார்கள்.

✡ ஆண்டவனை வணங்குவதால் தவம் செய்யவோ, யோகத்தை மேற்கொள்ளவோ எவரும் விரும்பமாட்டார்கள்.

✡ துறவி நாடுவது தனிமை. துறவியை நாடி எவரும் வரப் பிரியப்பட மாட்டார்கள்.

✡ கதைசொன்னால் பெரிய கூட்டம் சேரும். பாடம் படிக்க கூட்டம் வாராது.

✡ ஆர்வம் என்றால் என்ன?

✡ நாம் என்பது ஜீவாத்மா.

✡ உலகில் உள்ள அனைவரும் ஜீவாத்மாக்கள்.

✡ பரமாத்மா ஆயிரமாயிரம் ஜீவாத்மாக்களாகப் பிரிந்தது.

✡ ஜீவன் ஜீவனோடு தொடர்புகொண்டு விளையாடுவதும், ஜீவியம் ஜீவியத்துடன் தொடர்புகொண்டு விளையாடுவதும், ஆனந்தம் ஆனந்தத்துடன் தொடர்புகொண்டு விளையாடுவதும் லீலை.

✡ ஜீவாத்மா பரமாத்மாவை நோக்கிப் போவது ஆர்வம்.

✡ ஒரு ஜீவாத்மா அடுத்த ஜீவாத்மாவை நோக்கி வருவதும், அது பரமாத்மாவை நோக்கிப் போவதாகும்.

- ✡ அதனால் ஒரு ஜீவாத்மா பரமாத்மாவை நோக்கிப் போகும்பொழுது ஏனைய ஜீவாத்மாக்கள் அதை நோக்கி வருவது இயல்பு. இது உலக வாழ்வு.
- ✡ ஜீவாத்மா பரமாத்மாவை நோக்கிப் போவது தவம், சன்னியாசம், துறவறம், யோகம். அது மற்ற ஜீவாத்மாக்களுக்கு ஒத்து வாராது. அதனால் அது தனிமையில் விடப்படும்.
- ✡ கோவில்களில் கூட்டமிருக்கும்.
- ✡ ஆசிரமங்களில் கூட்டமிருக்காது.
- ✡ ஏற்றத்தாழ்வு வாழ்வின் சட்டம்.
- ✡ ஏற்றமும், தாழ்வும் இணைந்தது தொடர்ந்த ஏற்றம்.
- ✡ அலை என்பது அது போன்றது. அலை நகரும்பொழுது ஏற்றத்தாழ்வைக் காண்கிறோம்.
- ✡ வியாபாரம் பெருகுவதற்கும், மழை பொழிவதற்கும், மனித வாழ்விற்கும், தெய்வ பக்திக்கும் - எந்தச் செயலுக்கும் - அடிப்படையான சட்டம் ஒன்றே.
- ✡ மனம் அன்னையை நாடினால் நம்மை நோக்கி இருவர், மூவர், பலர் வருவார்கள்.
- ✡ அவர்கள் நம்மிடம் பேசலாம், பேசாமலிருக்கலாம்.
- ✡ அந்த ஆர்வம் குறைந்த அதே நேரம் அவர்கள் விலகிப் போவார்கள்.
- ✡ அந்த ஆர்வம் அவர்களைக் காந்தம் போலிழுக்கும்.
- ✡ நமக்கு ஆர்வம் எந்த அளவிலிருக்கிறதோ, அந்த ஆர்வத்திற்குரியவர் நம்மை நோக்கி வருவார்.
- ✡ ஆர்வம் குறைவதற்குப் பதிலாக அதிகப்படலாம்.
- ✡ அதே நேரம் உடனிருந்தவர் விலகுவர்.
- ✡ உயர்ந்த ஆர்வத்திற்குரியவர் வருவர்.
- ✡ வருபவர் எண்ணிக்கையும், தரமும் நம் ஆர்வத்தைப் பொருத்தது.
- ✡ ஆர்வம் அதிகமாகிக்கொண்டேயிருந்தால், உடனிருப்பவர் போவதும், புதியவர் வருவதும் தெரியும்.



- ✡ தொடர்ந்த ஆர்வமிருப்பது அரிது.
- ✡ அதிகமாக உயர்ந்தபொழுது, ஆர்வம் சரிவதுண்டு.
- ✡ சரிவது கொஞ்ச நாட்களுக்கிருக்கும்.
- ✡ அக்கொஞ்ச நாட்களில் இப்புதிய நிலைக்கேற்றவர் வருவர்.
- ✡ அப்படி வருபவர் ஏற்கனவே விலகியவராக இருக்கும். அல்லது அப்பொழுதுள்ள தாழ்ந்த ஆர்வத்திற்குரிய புதியவராகவுமிருக்கும்.
- ✡ ஆர்வத்தின் கட்டம் பக்தனுடைய நிலையிலிருந்து சாதகனுடைய நிலைக்கும், யோகியின் நிலைக்கும் போக வாய்ப்புண்டு.
- ✡ தொடர்ந்த முன்னேற்றமிருந்தால் அனைவரும் விலகி முழுத்தனிமை ஏற்படும்.
- ✡ அத்தனிமை தனிமையாக இருக்க வேண்டுமா, பலரைச் சந்திக்க வேண்டுமா என்பது அவருக்கு உள்ளுணர்வால் ஏற்பட்ட கடமை நிர்ணயிக்கும்.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தனக்குரியனவெல்லாம் தன் அகந்தையின் உரிமையாகக் கருதுகிறான் மனிதன். அகந்தை இழந்தபின் அவனையும், அவன் உடைமைகளையும் இறைவன் ஆட்கொள்வான்.

***மனம் விழையும் சரணாகதியை ஜீவன் ஏற்றுக்கொள்ளும் தருணம் ஆன்மா மலரும் அற்புத நேரமாகும்.***

## ஜீவிய மணி

**அன்பை அறிந்தவர்க்கு வாழ்வு தென்றல்.**

## People prefer misery to luminous joy.

**சந்தோஷத்தைவிட, கவலை மனிதனுக்கு உகந்தது.**

- ✡ அன்னை மேற்சொன்னபடி சொல்வது நமக்கு விளங்காது; ஏற்பது சிரமம்; முரண்பாடாகத் தோன்றும்.
- ✡ அனுபவம் அதிகமாக உள்ளவர் நுட்பமாகச் சிந்திப்பவரானால், இதை அறிவார். ஏனெனில், கவலை தரும் சந்தர்ப்பம் ஒரு சிறு சௌகரியத்-துடன் சேர்ந்திருக்கும். அதை விட மனமில்லாமல் மக்கள் அத்துடன் உள்ள கவலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருப்பார்கள்.
- ✡ 40 வயதானவர்; படிப்பில்லை; தொழிலில்லை; அதுவரை 100 ரூபாய் முழுவதும் சம்பாதித்ததில்லை. அண்ணன் மகன் உதவியாலும், அக்கா மகன் உதவியாலும் அதுவரை குடும்பம் நடத்திவிட்டார். 5 ஏக்கர் நல்ல நிலமிருக்கிறது. சரிவரப் பயிரிடாததால் சாப்பாட்டிற்கே போதுமான நெல் வருவதில்லை. பழைய பெரிய வீடு. இரு பிள்ளைகள்; 15, 10 வயதில் படிக்கிறார்கள். இவர் மைத்துனன் இவருக்குள்ள கடன் பாரம், நிலம் பயிரிட பணமில்லாத நிலைக்குரிய காரணம், இனி வரப் போகும் செலவுகளை உத்தேசித்து இவர் வாழ்வை செப்பனிட முயன்றான். இவரால் பயிர் செலவுக்கு 100 ரூபாய் வாங்க முடியாத நிலை. நில அடமான பாங்கில் 2000 ரூபாய் கடன் (1965இல்). கடன் அழிந்து நிலம் சரிவரப் பயிரானால் அன்றைய நிலவரப்படி ஆண்டிற்கு ரூ.2000த்திற்கு மேல் வரும். அது ஒரு மாதத்திற்கு ரூ.160 வரும். அன்று அது ஒரு தாசில்தார் வருமானம். இவருடைய குடும்பம் இவருக்கு சிறு உதவி செய்கிறது. நிரந்தர உதவி செய்யும் நிலையோ, மனமோ அவருக்கில்லை. மைத்துனன் அவருக்குக் கீழ்க்கண்டபடி கூறினான்:
  - ❀ "உங்கள் நிலத்தை நன்கு பயிரிடத் தேவையான பணம் தயார் செய்து, நிலத்தை முறையாகப் பயிரிட்டு, பாங்க் கடனை சிறிது, சிறிதாக அடைத்துவிட்டு, அது முடிந்தபின் அடுத்த ஆண்டிற்குரிய செலவுடன் நிலத்தை உங்களிடம் ஒப்படைக்கிறேன். அதன்பிறகு நல்ல வருமானம் வரும்" என்றான்.



  - ❀ அந்த நிர்வாகப் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொள்வதாகவும் கூறினான்.

  அவர் "சரி" என்றார். "உங்கள் பங்குக்கு நீங்கள் உங்கள் நிலத்தின் மீது அத்தொகையைக் கடனாக எழுப்ப எனக்கு அனுமதி தரவேண்டும்" என்றான். "நீயே உன் பொறுப்பில் கடனை வாங்கு. என் நிலத்தின் மீது வேண்டாம்" என்றார்.
- ✡ உறவு எதுவானாலும் உரிய உதவி தர முன்வருபவர் குறைவு.
- ✡ தான் முன்னேறத் தனக்குக் கிடைக்காத உதவி தேடி வரும்பொழுது பொறுப்பேற்க மனம் வருவதில்லை.
- ✡ அவர் மேலும் கேட்டார்: "அதன்பிறகு இன்று நீ தரும் உதவியைத் தருவாயா?" என்றார். மைத்துனன் "எனக்குச் சிறு உத்தியோகம். சிரமப்பட்டு உதவுகிறேன். நான் இதிலிருந்து விடுதலை பெறவே இவ்வளவு பொறுப்பை ஏற்கிறேன்" என்றான். "என் நிலத்தின் மீதும் கடன் வாங்க வேண்டாம். உன் உதவியையும் நிறுத்த வேண்டாம். இவையெல்லாம் எனக்குச் சம்மதமில்லை" என்று மாமா கூறினார்.
- ✡ தன் நிலை பரிதாபம். வறுமையிலிருந்து வெளிவந்தால் சுதந்திரமாக வாழலாம். இன்று பெறும் சிறு உதவியை விடவோ, முன்னேறும் பொறுப்பை ஏற்கவோ அவர் முன்வரவில்லை. இதுபோன்ற நிலைமைகள் ஏராளம்.
- ✡ கவலைக்கிடமான வறுமை, சந்தோஷம் தரும் பொறுப்பைவிட மனத்திற்கு இதமாக உள்ளது என்பதை அன்னை வலியுறுத்திக் கூறுவார்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தனி மனிதனின் சாதனைகள் தனித்தே நிற்கும். அவை உலகத்தின் சாதனைகளாக மாற, அவன் மனம் விரிந்து உலகத்தைத் தன்னுள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

*விரிந்த மனம் தனி மனிதன் சாதனையை*
*உலகத்தின் சாதனையாக மாற்றும்.*

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIV. The Supermind — As Creator

Page No.130
Para No.16

Being, knowledge, will are there in Mind.
They are all divided here.
Their consciousness is divided.
In Supermind they are not so divided.
There they are a trinity.
They are one movement.
They have three aspects.
They are effective.
Each has its own effect.
Being has the effect of substance.
Consciousness has the effect of knowledge.
It guides itself.
It shapes the idea.
It comprehends and apprehends.
Will gives the effect of self-fulfilling force.
The idea is light.
It is the light of reality.
It illuminates itself.
It is not mental thought.



## 14. சத்தியஜீவியம் - சிருஷ்டிகர்த்தா

ஜீவன், ஞானம், சக்தி ஆகியவை மனத்திலுள்ளன.
அவையெல்லாம் இங்கு பகுக்கப்பட்டுள்ளன.
அவற்றின் ஜீவியம் பகுக்கப்பட்டது.
சத்தியஜீவியத்தில் அவை அப்படிப் பகுக்கப்படவில்லை.
அங்கு அவை திருமூர்த்திகளாக உள்ளன.
மூன்றும் அங்கு ஒன்றே.
அங்கு மூன்று அம்சங்களுள்ளன.
அவை சக்தி வாய்ந்தவை.
ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய சக்தியுண்டு.
ஜீவனுக்குப் பொருளின் பலன் உண்டு.
ஜீவியத்திற்கு ஞானத்தின் பலன் உண்டு.
அது வழி நடத்தும்.
அது எண்ணத்தை உருவாக்கும்.
அது அகமும், புறமுமாகும்.
சக்தி தன்னைத் தானே பூர்த்தி செய்துகொள்ளக் கூடியது.
எண்ணம் பிரகாசமானது.
அது சத்தியப்பிரகாசம்.
அது சுயம்பிரகாசம்.
அது மனத்தின் எண்ணமன்று.

**Nor is it imagination.**
**It is effective self-awareness.**
**It is Real-Idea.**

**The Idea has knowledge and will.** Page No.130
**In Supermind they are one.** Para No.17
**They are not separated.**
**They are one as being and substance are one.**
**The substance is one with the being.**
**Being is luminous power of substance.**
**The substance of fire burns.**
**There is burning light.**
**They are not different.**
**So the Idea is one with the Being.**
**The power of the Idea is one with the substance of the Being.**
**The substance works itself out in the Idea.**
**That is development.**
**In our mentality all are different.**
**We have an idea.**
**We have a will according to the idea.**
**The will is the impulsion of the idea.**
**One detaches from the other.**
**We separate the idea from the will.**
**We separate both from ourselves.**
**I am.**
**It is an idea.**
**It is an abstraction.**
**It mysteriously appears in me.**
**The will is another mystery.**
**It is a force.**



**அது கற்பனையுமில்லை.**
**தன்னையறியும் சக்தியது.**
**அது முழு எண்ணம்.**

**எண்ணத்திற்கு ஞானமும் சக்தியும் உண்டு.**
**சத்தியஜீவியத்தில் இரண்டும் ஒன்றே.**
**அவை பிரிந்தவையன்று.**
**ஜீவனும், பொருளும் இணைந்த ஒன்று அது.**
**பொருள் ஜீவனுடன் கலக்கிறது.**
**ஜீவன் பொருளின் பிரகாசம்.**
**பொருள் தழலாக எரிகிறது.**
**அது பிரகாசமாக எரிகிறது.**
**அவை வேறன்று.**
**எனவே எண்ணமும், ஜீவனும் ஒன்றே.**
**எண்ணத்தின் சக்தி ஜீவனின் பொருளுடன் சேர்கிறது.**
**பொருள் எண்ணமாக வெளிவருகிறது.**
**அது அபிவிருத்தியாகும்.**
**நம் மனத்தில் அவை வேறு.**
**நமக்கு ஓர் எண்ணம் உண்டு.**
**எண்ணத்திற்குரிய சக்தியுண்டு.**
**எண்ணம் உந்துவது சக்தி.**
**ஒன்று அடுத்ததிலிருந்து பிரிகிறது.**
**நாம் எண்ணத்தையும், சக்தியையும் பிரிக்கிறோம்.**
**இரண்டையும் நம்மிலிருந்து பிரிக்கிறோம்.**
**நானிருக்கிறேன்.**
**அது ஓர் எண்ணம்.**
**அது தத்துவம்.**
**அது புதிராக எழுகிறது.**
**சக்தி மற்றொரு புதிர்.**
**அது சலனமாகும் சக்தி.**

**It is nearer to concreteness.**
**It is, of course, not concrete.**
**It is something not myself.**
**It is something I have got.**
**It is something I am seized with.**
**But I am not.**
**I make a gulf between my will and its effect.**
**To me, there are concrete realities.**
**They are outside of me.**
**They are other than myself.**
**So none of them is self-effective.**
**The idea may fall from me.**
**The will may fail.**
**The means may be lacking.**
**I myself may remain unfulfilled.**
**It is by any of them.**
**Or it may be by all of them.**

*Contd...*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தீர்க்க முடியாத சிக்கல்கள் வேலையின் அளவைப் பொருத்தது அன்று. வேலை பெரியதானாலும், சிறியதானாலும் மனத்தின் அந்தரங்கங்கள் வெளிப்படுவதால் நாம் காண்பதே அச்சிக்கல்கள். வேலையிருந்தாலும் இல்லாவிட்டாலும் மனத்தின் சிக்கல்கள் மனதிலிருக்கும்.

***மனத்தின் சிக்கல் மனத்தைப் பொருத்ததே.***



**அது ஜடத்திற்குச் சமமானது.**
**அதுவே ஜடமில்லை.**
**அது நானில்லை.**
**இது நான் பெற்றது.**
**நான் ஏற்றுப் போற்றுவது இது.**
**ஆனால் நானில்லை.**
**என் சக்திக்கும், பலனுக்குமிடையே ஒரு வெளியை ஏற்படுத்துகிறேன்.**
**இவை எனக்கு ஜடசத்தியம்.**
**அவை எனக்குப் புறம்பானவை.**
**அவை என்னிலிருந்து வேறுபட்டவை.**
**எனவே அவை எதுவும் தானே பலன் தாரா.**
**எண்ணம் என்னிடமிருந்து விழலாம்.**
**சக்தி தோற்கலாம்.**
**ஜெயிக்கும் சாதனம் இல்லாமலிருக்கலாம்.**
**நானே பூர்த்தியாகாமலிருக்கலாம்.**
**எதனாலும் இது நடக்கலாம்.**
**எல்லாவற்றாலும் நடக்கலாம்.**

*தொடரும்...*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் திருவுருமாற்றம் பெற, தெளிவு தேவை. உணர்வு திருவுருமாற்றம் பெற, தெளிவு போதாது, நோக்கம் மாற வேண்டும். உடலுக்கு இந்த இரண்டும் போதாது. உடலிலுள்ள ஆன்மா வெளிப்பட்டுச் செயல்பட்டால்தான் உடல் திருவுரு மாற்றமடையும்.

***ஆன்ம வெளிப்பாட்டால் மட்டும் உடல் திருவுருமாற்றம் பெறும்.***

## அன்பர் கடிதம்

நான் ஒரு ஓய்வு பெற்ற அரசு ஊழியன். வயது 75. ஜனனம் பாண்டி அருகிலுள்ள வில்லியனூர். வருடம் 1932. 1937இல் தாயாரின் மரணத்தால் சகோதரன், சகோதரியுடன் திருவண்ணாமலைக்குத் தகப்பனாருடன் குடியேறினேன். பிரென்ச் பிரஜையானாலும் 17.11.04 வரை, அதாவது 74 வயது வரை அன்னையைப் பற்றிய ஞானம் எனக்கு இல்லை. 17.11.04ஆம் தேதி என் உறவினரின் சடங்கு ஒன்றில் கலந்து கொள்ள வில்லியனூர் சென்றேன். உடன் என் சகோதரியும் வந்தாள். வயது 79. அப்போது என் உறவினர், ஸ்ரீ அன்னை மற்றும் ஸ்ரீ அரவிந்தர் பெருமைகளைக் கூறி, இன்று அன்னை அவர்கள் நினைவு தினம் என்றும், தரிசனம் செய்ய ஏற்ற நாள் என்றும் கூறினார்.

நேராக அன்னை தியான மையத்திற்குச் சென்றேன். மனம் உருகி தியானம் செய்தேன். தியானத்தில் அன்னையின்பால் அன்பு அதிகரித்ததை உணர்ந்தேன். அன்னையின் புகைப்படம் ஒன்றினை வாங்கிக் கொண்டு அம்பத்தூர் திரும்பினேன். என்னுள் ஏதோ ஒரு இனமறியாத மன அமைதியினை உணர்ந்தேன். 18.11.04 முதல் இன்று வரையில் அன்னை படத்திற்கு மலர்கள் வைத்து, ஊதுவத்தி ஏற்றி வைத்து என்னை அன்னைக்கு தியானம்மூலம் அர்ப்பணம் செய்துகொள்வேன். மனிதர்களிடம் நேரில் பேசுவதுபோல் அன்னையின் படத்துடன் பேசுவேன். அடிக்கடி பிறர் வாழ பிரார்த்தனை செய்வேன். ஆழமான, அசைக்க முடியாத என் சமர்ப்பணத்தால் மனஅமைதி கிடைத்தது. என் தேவைகள் அனைத்தும் அன்னை நிறைவேற்றி வைத்தார்கள். என் அயராத பிரார்த்தனையாலும், அன்னைபால் வைத்துள்ள நம்பிக்கையினாலும் கீழ்க்காணும் நல்ல காரியங்களை அன்னை எனக்கு வாழ்க்கையில் அளித்து, வளம் பெறச் செய்தார். எனது குடும்பம் அடைந்த பலன்கள் வருமாறு:

1) அம்பத்தூரில் ரூ.7 இலட்சத்தில் ஒரு பிளாட் வாங்கியது.

2) எனது சொந்த வீடு (வாலாஜாபேட்டையில் உள்ளது) ரூ.7.75 இலட்சத்துக்கு விற்கப்பட்டது.

3) 1989இல் நான் ஓய்வு பெறும்போது தவறுதலாக நிர்ணயிக்கப்பட்ட ஓய்வு ஊதியம் அன்னையின் அருளால் எனது வேண்டுகோள்படி அரசால் பென்ஷன் மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டதன் விளைவாக ரூ.56,000/- நிலுவைத் தொகையாகப் பெற்றேன்.

4) என் மனைவியின் பூர்வீகச் சொத்து விற்றதில் ரூ.1,00,000/- கிடைத்தது.

5) முதுகு வலியால் மிகவும் துன்புற்றான் என் மகன். எந்தவித சிகிச்சையும் இல்லாமல் அன்னையின் அருளால் வலி போய்விட்டது.

6) அன்னை 24.8.05 அன்று ஒரு பெரிய அதிர்ச்சியை எனக்கு தந்தார். அதாவது என் மனைவி பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு மரணத்தின் விளிம்பிற்கு சென்ற நிலையிலும் மனம் தளராமல் அன்னையிடம் வேண்டினேன். நோயின் தாக்குதலால் வலக் கால், வலக் கை செயல் இழந்தது. வாய் பேச்சும் வரவில்லை. இந்த நிலையிலும் அன்னையின் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மன்றாடியதால், தற்சமயம் வீட்டோடு நடக்கிறாள்; சற்று பேச்சும் வருகிறது. இது அன்னையின் சோதனை என்று எண்ணி அன்னையினை வெறுக்காது பிரார்த்தனை செய்தேன்.

எனவே உள்உணர்வோடு அன்னையிடம் நமக்காக இல்லாது, பிறர் துன்பங்கள் போக பிரார்த்தனை செய்தால் நம் குடும்பம் நல்ல முறையில் முன்னேறுவதை நான் அனுபவிக்கிறேன்; கண்கூடாக, நிதர்சனமாக உணர்கிறேன்.

மழை வேண்டி 2004ஆம் ஆண்டு கீழ்க்காணும் வாசகத்தினை என் உறவினர்கள், நண்பர்கள்மூலம் சுமார் 100 தொடர் கடிதங்களை எழுத ஏற்பாடு செய்தேன். மழையும் வந்தது.

மழைக்கான அன்னை தோத்திரம்:

அன்னையே! சரணம்!<br>
அன்னையே! சமர்ப்பணம்!<br>
அன்னையே! அன்பின் இருப்பிடம்!<br>
அன்னையே! ஆறுதல் அளிப்பவர்!<br>
அன்னையே! அனைத்தும்!

அன்னையே! உன்னையே எப்போதும் நினைத்தாலே! வளமையே
உண்டாகும் வான்மழையாலே!

முடிவாக, இறுதியாக, அன்னையிடம் நாம் நம்பிக்கையுடன் சரணடைந்தால் கட்டாயம் கைதூக்கிவிடுவார்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கடமையை உணர்ந்து நடைமுறையில் பூர்த்தி செய்வது ஆன்மாவின் ஆர்வம்.

ஒரு வேலையை அதிகாரத்திற்குப் பணிந்து அல்லது கடமைக்காகச் செய்வது தவறாது பலனைத் தரும். அதே வேலையை அதன் ஆன்மீக முக்கியத்துவத்தை உணர்ந்து, தன் அந்தராத்மாவின் முன்னேற்றத்திற்காகச் செய்தால், ஆன்மா மலரும்.

பிரார்த்தனையின் பலனுக்காக அன்னையை நம்பி வணங்கினால் பலன் தவறாது கிடைக்கும்.

பலனைத் தரும் அன்னையின் ஆன்மீக உயர்வை நம் ஆன்மாவில் உணர்ந்து நெஞ்சம் பூரித்தால், பலன் பெறுவதுடன் வாழ்வு சிறந்து, ஜீவன் ஆன்மீகப் பெருவெளியில் அனந்தனின் அற்புதம் என மலரும்.

***வாழ்வு சிறந்து ஜீவன் ஆன்மீகப் பெருவெளியில்
அனந்தனின் அற்புதம் என மலரும்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# நாய் விற்ற காசு குலைக்கும்

பணம், பொருள்கள், இடம், காலம், மனிதர்களுக்குக் குணம் உண்டு. அவர்கள் போகுமிடங்களில் அவர்கள் குணம் தொடரும். கடிதம் எழுதிப் பழக்கமில்லாதவர், அவருக்குக் கடிதம் என்று வருவதில்லை. திருமணப் பத்திரிகை போன்றதே வரும். அவர் புதுவீடு குடி போனார். அது போஸ்ட்மாஸ்டர் வீடு. அவருக்கு அடிக்கடி கடிதங்கள் வர ஆரம்பித்தன. அவரும் கடிதங்கள் எழுத ஆரம்பித்தார். அது போஸ்ட்மாஸ்டர் வீட்டு இராசி. கடன் வாங்கியவன் திருப்பிக் கொடுக்கும்பொழுது தான் திருடிய பணத்தைக் கொடுத்தான். அப்படி பலருக்குக் கொடுத்தான். ஒருவர் வீட்டில் திருடு போயிற்று. அடுத்தவர் மீது திருட்டுக் குற்றச்சாட்டு எழுந்தது. மூன்றாவது நபருக்குத் திருடத் தோன்றி திருடினார். திருடனுடைய பணத்திற்குத் திருட்டுக் குணம் உண்டு.

ஒரு பாங்க் சேர்மன். அளவுகடந்து குடிப்பார். இவருக்கு சாராயக் கம்பனியில் கூட்டு உண்டு. இவர் நண்பர்கள் குடிகாரர்கள். குடியில் உள்ள இரகங்களை அலசிப் பேசுவது இவர்கள் பொழுதுபோக்கு. ‘இவர் ஒரு வாரம் குடிக்காமலிருந்ததில்லை’ என்று ஒருவர் கூறிய பொழுது, அடுத்தவர் ‘இவர் ஒரு வேளை குடிக்காமலிருந்ததில்லை’ என மாற்றிக் கூறினார். இவர் ஒரு அன்பருக்குப் பெரிய கடன் தொகை கொடுத்தார். அதன்பின் 3 மாதங்கள் குடிக்காமலிருந்தார். அது அவரில் அவரறியாமல் நடந்த அன்னையின் திருவுருமாற்றம். அன்பர் ஒரு விஷயத்தைக் கவனிக்கலாம். தங்கள்மூலமாக நடமாடும் பணம், பொருள்கள், செயல்கள் எப்படி மாறுகின்றனஎனக் கவனித்தால் கருமியிடம் பெற்ற காசு தாராளமானச் செலவுக்கு உதவுவதையும், சில சமயங்களில் சிக்கனமாகச் செலவாவதையும் காணலாம்.

**எந்த அளவுக்கு ஒரு செயல் நம் வழியாகப் போகும்பொழுது திருவுருமாறுகிறதோ, அந்த அளவுக்கு நம் மனம் அன்னையின் திருவுருமாற்றத்தை ஏற்றுக்கொண்டிருப்பதைக் காட்டும்.**

1970இல் வட்டிக் கடைக்காரர் மூலதனம் கொடுத்துச் செய்த தொழில்மூலம் 65 பேருக்கு பாங்க் கடன் கொடுத்தபொழுது, ‘அந்தப் பணம் வாராது’ என சவால் எழுந்தது. ‘ஒருவரும் திருப்பிக் கொடுக்க மாட்டார்’ எனவும் அபிப்பிராயம் தெரிவித்தனர். 65 பேரும் தேதி தவறாமல் கடனைத் திருப்பித் தந்தனர். அதற்கு ஒரு காரணம் இந்த வட்டிக் கடைக்காரர் பரம்பரையில் 1 ரூபாய்கூட வசூலிக்காமல் விட்டதில்லை.

❀❀❀

# பிரம்ம ஜனனம்

The Life Divineஇல் 10ஆவது அத்தியாயம் சித்-சக்தி.

உலகிலுள்ள அனைத்திற்கும் ரூபம் உண்டு. ரூபம் என்பது சக்தி பெறும் உருவம்என்று இந்த அத்தியாயம் ஆரம்பிக்கிறது. சச்சிதானந்தம் என்பதை நாம் சச்சிதானந்த பிரம்மம்எனக் கூறுகிறோம். உலகில் சச்சிதானந்தம் ரூபம் பெற முயன்று (perfect form) சிறப்பான ரூபத்தை எய்த முயல்கிறதுஎன பகவான் ஸ்ரீ அரவிந்தர் இந்த அத்தியாயத்தை முடிக்கிறார்.

நாம் பிரம்மம் என்பதை ஆங்கிலத்தில் Absolute என்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் நாம் கடவுளை பிரம்மம் என்பதுபோல் கடவுளை Absolute எனக் குறிப்பிடுகிறார்கள். அறிவு அரைகுறையாக இருக்கலாம், முழுமையாக இருக்கலாம், சிறப்பாக இருக்கலாம், அறிவில் அறியாமை கலந்திருக்கலாம், அறியாமையின் கலப்பேயில்லாமலிருக்கலாம். அறிவு சிறந்து, முழுமை பெற்று, அறியாமை கலப்பில்லாமல் பூரணம் பெற்றால் அதை என்னவென்று கூறுவது? Absolute intelligence எனக் கூறினால் அதன் பகுதிகள் அனைத்தும் அறிவாகவே இருக்கும் என்று பொருள். அப்பொழுது அறிவு ஞானமாகி உயர்ந்து

**பிரம்ம ஞானமாகிறது.**

அழகு, இனிமை, சக்தி, ஆனந்தம், மௌனம், ரூபம், சுபாவம், சலனம், சந்தர்ப்பம், காலம், இடம், உணர்வு, உற்சாகம், கற்பனை, தீர்மானம், விவேகம், அனுபவம், உறவு, உள்ளுணர்வு, உயிர், மனம், காட்சி, தரிசனம்என சிருஷ்டியில் ஆயிரம் அம்சங்களுள்ளன. அவை தங்கள் சிறப்பான சிகரத்தைச் சீரிய முயற்சியால் எட்டும் நேரம் குறை கலப்பற்ற நிறைவை எய்துகின்றன. அந்த நிறைவைக் குறிக்கும் சொல் பிரம்மம். பிரம்மம் என்றால் எல்லாவற்றையும் தன்னுட்கொண்டு, எல்லாவற்றையும் சிருஷ்டிக்கும் திறமை பெற்று, எந்தக் குணமுமில்லாமல், எந்த ரூபமுமில்லாமலிருப்பது எனப் பொருள். சித்-சக்தி என்ற அத்தியாயம் முடியுமிடத்தில் பகவான் அதைக் கூறுகிறார். அதுவே சிருஷ்டியின் இலட்சியம் என்கிறார்.

**உலகில் பிரம்மம் ரூபத்தில் ஜனிப்பது, பிரம்ம ஜனனம் எனப்படும்.**

பிரம்ம ஜனனத்தில் நாம் காண்பவை பிரம்மானந்தம், பிரம்ம ரூபம், பிரம்ம மௌனம், பிரம்ம பூரணம், பிரம்ம சுபாவம், பிரம்ம சக்தி, பிரம்ம சலனம், பிரம்மானுபவம், பிரம்ம விவேகம், பிரம்ம தரிசனம், பிரம்ம திருஷ்டி ஆகியவை ஆகும்.

❀❀❀